விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 29 செவ்வாய்க்கிழமை (13.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ஜெனிவாக் கூட்டத் தொடரில்
# இலங்கை அரசுக்கு கடும் அழுத்தம்
## பதிலளிக்க அரசும் தயார் நிலையில்

(கொழும்பு) ஜெனிவா கூட்டத்தொடரில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுசைன் இலங்கை மீது கடும் அழுத்தங்களை பிரயோகிப்பார் என தெரிவிக்கப்படுகிறது. மேலும் இதற்கு பதிலளிக்க அரசாங்கம் தயாராகவுள்ளதாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.
(23ஆம் பக்கம் பார்க்க)

பொம்மைவெளியில் முறுகல்
### மன்னிப்புக் கோரியதில் பிரச்சினையின்றி தீர்வு

(யாழ்ப்பாணம்)
பொதுமக்களிடையே நேற்றையதினம் இரவு பொம்மைவெளி பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.
எனினும் பின்னர் முரண்பட்ட இரு தரப்பும் எந்தவித பிரச்சினைகளுமின்றி சமாதானமாக சென்றனர். 24

### சாவகச்சேரிப் பகுதியில் புலிகளின் சீருடையுடன் வெடி மருந்து மீட்பு



(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி டச்சுவீதி மருதடிப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வுப் பணியின் போது நிலத்தின் 23

### ஜனாதிபதி பதவிக்கு கோத்தபாயவே பொருத்தமானவர்

(கொழும்பு)
இலங்கையில் அடுத்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான அனைத்து தகைமைகளும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு காணப்படுகின்றது. 23

வேலைப்பளு காரணமாக
### ஜெனிவாவுக்கு செல்லவில்லை
முதலமைச்சர் விக்னேஸ்வரன்

(கிளிநொச்சி)
எனக்கிருக்கின்ற வேலைப்பளு காரணமாக நான் ஜெனிவாவுக்குச் செல்லவில்லை. இருப்பினும் எங்களது உறுப்பினர்கள் சகல விடயங்களையும் 23

## சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்த இளைஞனுக்கு
### 15 வருட கடூழியச் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)
16 வயதுக்குட்பட்ட சிறுமியை கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய இளைஞனுக்கு 15 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று தீர்ப்பளித்தார்.
குற்றவாளியின் இந்தக் குற்றத்துக்கு உதவிய அவரது நண்பருக்கு 5 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி மேல் நீதி 24

## கண்டி வன்முறைக்கு காரணம் பேஷ்புக் குழு
### நீதியமைச்சர் தலதா தகவல்

(பாலங்கொட)
கண்டியில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவம் பேஷ்புக்கை தவறாக பயன்படுத்தும் ஒரு குழுவால் உருவான அழிவு என நீதியமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.
அத்துடன் கண்டியில் வன்முறையை ஏற்படுத்தியவர்களுக்கு நாட்டில் அமுலில் உள்ள 23

### கண்டிக் கலவரத்துக்கு காரணமானோர் விபரம் விரைவில் அம்பலமாகும்
புதிதாக பதவியேற்ற சட்டம், ஒழுங்கு அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு



(கொழும்பு)
கண்டி மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற கலவரத்திற்கு காரணமானவர்களை விசாரணை அறிக்கை வெளிவந்தவுடன் விரைவில் அம்பலப்படுத்துவதாக 23

### சிறுமி துஷ்பிரயோக வழக்கு இளைஞனுக்கு 10 வருட கடூழிய சிறை
### நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு



(யாழ்ப்பாணம்)
16 வயதுக்குட்பட்ட சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.
2013ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதிக்கும் 2014ஆம் ஆண்டு பெப்ர 24

### நவாலியில் வீட்டின் மீது இனந்தெரியாதோர் பெற்றோல் குண்டுத்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
நவாலி சென்பீற்றர்ஸ் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று இரவு பெற்றோல் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
நேற்று 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் குறித்த வீதியால் வந்த 23

### சமூகவலைத்தளங்கள் இன்று சீராக வாய்ப்பு

(கொழும்பு)
கண்டியில் நடைபெற்ற வன்முறை சம்பவங்களை அடுத்து, பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களுக்கு விதிக்கப்பட்ட தடை தொடர்ந்தும் நீடிக்கிறது.
இந்த தடை தொடர்பில் நேற்றைய தினம் பல்வேறு பேச்சு 23

## தமிழ் இன அழிப்பிற்கு நீதிகோரி ஜெனிவாவில் மாபெரும் போராட்டம்



(ஜெனிவா)
ஈழத்தில் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பிற்கு நீதிகோரி மாபெரும் போராட்டம் ஒன்று ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்த நீதி கோரும் மாபெரும் போராட்டம் ஜெனிவா புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பூங்காவில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆரம் 23

ஊடகங்கள் மூலம்
### பயங்கரவாதத்திற்கு இடமளிக்க முடியாது
அமைச்சர் வஜிர அபேவர்தன

(கொழும்பு)
தொழில்நுட்பம் ஊடாகவும், ஊடகங்கள் மூலமும் உலகத்திலும், இலங்கையிலும் பயங்கரவாதத்தை உருவாக்க இட 23

## அடுத்த சில நாட்களில் வடக்கில் கனமழைக்கு வாய்ப்பு
கடல் கொந்தளிப்புடன் காற்றின் வேகமும் அதிகரிக்கும்

(கொழும்பு)
அடுத்து வரும் சில நாட்களில் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கடுமழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத் 24

## அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பின்நிற்கப் போவதில்லை
### ரத்தன தேரர் எச்சரிக்கை



(கொழும்பு)
விச இரசாயன உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை அரசாங்கம் கைவிடாவிட்டால், அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு தயங்கப் போவ 23

சமூக வலைத்தள முடக்கத்தால்
### நாட்டின் பொருளாதாரம் பின்னடைய வாய்ப்பு

(கொழும்பு)
சமூகவலைத்தளங்கள் முடக்கம் தொடர்பில் அரசாங்கம் விரைந்து தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.
அவ்வாறில்லையெனில் வெளிநாடுகளில் வாழும் இலங் 23

# யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள், பல்கலைக்கழகத்தை முற்றாக முடக்கும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழகத்தின் மின்குமிழ்கள் அணைக்கப்படல், நீர் விநியோகம் துண்டிக்கப்படல், பிரதான வாயிற் கதவுகளை மூடல் ஆகிய எதிர்ப்பு நடவடிக்கைகளை வெளிப்படுத்தி ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்களும் ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர். இதனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் முற்றாக தடைப்பட்டுள்ளன.

உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்ட உடன்பாட்டிற்கு அமைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர்மட்ட பதவிகள் நிரப்பப்படுவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமை என்பனவற்றோடு அப்பதவிகள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் காணப்படும் சீரற்ற தன்மையை நிவர்த்தி செய்யும்படி கல்விசாரா ஊழியர்களால் வழங்கப்பட்ட அழுத்தத்தை கவனத்திற் கொள்ளாமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 தொழிற்சங்கங்கள் ஒருங்கிணைந்து இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம்

## அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு அரசாங்கமே காரணமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா அழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து, கொழும்பிலுள்ள ஐ.நா. காரியாலயத்தில் நேற்று மனுவொன்று கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அரசியல் கைதிகளின் பிரச்சினையை தீர்ப்பதற்கோ, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கோ அரசாங்கம் தயாராக இல்லையென குறிப்பிட்ட அருட்தந்தை சக்திவேல், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கினால் சிறையில் இருக்கும் 112 தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள் எனக் குறிப்பிட்டார்.

எனினும், அரசாங்கம் அதற்கு தயாராக இல்லாத நிலையில், சர்வதேச ரீதியில் ஐ.நா ஆணையாளர் இவ்விடயத்தில் தலையிட்டு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென குறிப்பிட்டார். காணாமல் போனோர் அலுவலகமும் ஒரு கண்துடைப்புக்காகவே ஏற்படுத்தப்பட்டதென அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு ஐ.நாவால் வழங்கப்பட்ட கால அவகாசத்தில் ஒரு வருடமே எஞ்சியுள்ள நிலையில், பிரச்சினைகளை எப்போது தீர்க்கப் போகின்றோம் என அரசாங்கம் வாக்குறுதி வழங்க வேண்டும். அந்த வாக்குறுதியிலேயே இலங்கை அரசாங்கத்தினதும் தமிழ் மக்களினதும் எதிர்காலம் தங்கியுள்ளதென அருட்தந்தை சக்திவேல் மேலும் தெரிவித்தார். (ம)

# மத தலைவர்களுக்கிடையிலான நல்லிணக்கக்குழு கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

சர்வ மத தலைவர்களுக்கிடையிலான மாவட்ட நல்லிணக்க குழு கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த கூட்டத்தில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான சூழ்நிலை தொடர்பாகவும், அவசரகால நிலை தொடர்பில் மதத்தலைவர்கள் கூடி மதங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சர்வமத தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)


**காயத்திரி திருமாங்கல்ய சேவை**

உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ள என்றும் காயத்திரி திருமாங்கல்ய சேவையினை நாடுங்கள்.

**எமது சேவைகள்**

- திருமணம் நிச்சயித்தல்
- காண்டம் பார்த்தல்
- ஜாதகம், குறிப்பு எழுதுதல்
- பலன் பார்த்தல்

(3207)

**தொடர்பு:0212232222,0768351932**

**முகவரி:ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**


# யாழினையும் முல்லைத்தீவினையும் இணைக்கும் விதத்தில் பாலம்

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

(கரணவாய்)

யாழ்.குடாநாட்டினையும் முல்லைத்தீவினையும் இணைக்கும் விதத்தில் பாலம் அமைத்து பாதை ஒன்று அமைப்பது தொடர்பில் மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புப் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மருதங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெற்றது.


இதில் கலந்து கொண்ட வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை யோசனை ஒன்றினை முன்வைத்தார். அதாவது சுண்டிக்குளத்திற்கும் சாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பாதை ஒன்று உள்ளது. அதனை திறந்து விட்டால் ஆனையிறவுக்கு செல்லாது முல்லைத்தீவிற்கு கிட்டிய வழியாகப் பிரயாணம் செய்யலாம் என்பதே அவ் யோசனை.

அதனை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான எம்.ஏ.சுமந்திரன் ஏற்றுக்கொண்டு அதற்கு பாலம் அமைத்து பாதை அமைப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவித்தார். (ம-60)

# மரண அறிவித்தல்

## செல்லையா நாகராஜா

தோற்றம் 25 - 07 - 1939



மறைவு 12 - 03 - 2018

*மானிப்பாயை பிறப்பிடமாகவும், 190/1 விசுவமடு அதிசய விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நாகராஜா அவர்கள் 12.03.2018 நேற்று இறைபதம் அடைந்துவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற செல்லையா-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னம்மா அவர்களின் அன்புக் கணவரும், றோகிதா (மு/பாரதி மகா வித்தியாலய ஆசிரியர்), கலாதரன் (நீர்ப்பாசன திணைக்களம்-கிளிநொச்சி), கலாவதி, கலாமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் திருவருட்செல்வன், நளாயினி (கிளிநொச்சி வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்), செல்வக்குமார் (கம்சிகன் பல்பொருள் வாணிபம்-புதுக்காடு), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சிகன், ஹரணிகா, துளசிகன், கம்சிகன், பிருந்தவி, அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், அமரர் பஞ்சலிங்கம், இராசலிங்கம், அருமைத்துரை, தவமணிதேவி, இராசலட்சுமி, பூமலர், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.03.2018 இன்று காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12ஆம் கட்டை இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**இல.190/1, விசுவமடு மேற்கு.**

(சி-1864)

**தகவல்: கஜன் (மருமகன்)**

# உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 29 வீதமாக அதிகரிப்பு-கீர்த்தி தென்னக்கோன்

(கொழும்பு)

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் 29 வீதமாக அதிகரித்துள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் வட்டார அடிப்படையில் 535 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருந்தனர்.

மேலும், 1991 பெண்கள், உள்ளூராட்சி சபைகளுக்கு அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களால் மேலதிகப் பட்டியல்கள் மூலம் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, உள்ளூராட்சி சபைகளில் 2526 பெண் பிரதிநிதிகளின் பெயர்கள் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன.

மேலதிகப் பட்டியலின் மூலம் அதிகளவு பெண்களை ஐக்கிய தேசியக் கட்சியே நியமித்துள்ளது.

முன்னர் உள்ளூராட்சி சபைகளில் 1 வீதமாக இருந்த பெண்களின் பிரதிநிதித்து வம் இப்போது 29 வீதமாக அதிகரித்துள்ளது. இது ஒட்டுமொத்தமாக பெரிய முன்னேற்றம்.

இந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகள், 17,128 பெண் வேட்பாளர்களை போட்டியில் நிறுத்தியிருந்தன.

இந்தத் தேர்தலின் மூலம், 8,721 உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எனினும், 15 உள்ளூராட்சி சபைகளில், பெண்களுக்கான 25 வீத இடத்தை ஒதுக்கீடு செய்ய முடியவில்லை.

பருத்தித்துறை, மன்னார், முசலி, வெருகல், திருகோணமலை பட்டினமும் சூழலும், தம்பலகாமம், மூதூர், காரைதீவு, திருக்கோவில், மன்முனை, வனாத்தவில்லு, கொட்டகல ஆகிய பிரதேச சபைகளிலும், திருகோணமலை மற்றும் கிண்ணியா நகர சபைகளிலும்ம, பெண்களுக்கான 25 வீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# அரசாங்கம் மதவிழுமியங்களை உதாசீனம் செய்து வருகிறது-கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மதவிழுமியங்களை உதாசீனம் செய்து வருவதாலேயே நாட்டில் அதிகளவான பிரச்சினைகள் எழுவதற்கு காரணமென முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை தொடர்பில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் வெறுமனே அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையை கேட்டு செயற்படாமல், மஹாநாயக்க தேரர்களின் ஆலோசனையைப் பெற்று செயற்பட்டால் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியுமென கோத்தபாய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசாங்கம் மத விழுமியங்களை தற்போது உதாசீனம் செய்து வருகின்றது. நான் பதவியிலிருக்கும் போது நெருக்கடியான நிலைமைகளில் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே செயற்பட்டேன் எனத் தெரிவித்த கோத்தபாய, அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது எனக்கூறுவதில் எந்தவொரு பயனுமில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம)

# விமானம் விழுந்து விபத்து

# நேபாளத்தில் 77 பேர் பலி!

(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 77 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த 17 பயணிகள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காத்மண்டு திருபுவன் விமான நிலையத்தில் நேற்று பிற்பகல் விமானம் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளரானது.

பங்களாதேஷ் தலைநகரில் இருந்து வந்த விமானத்தில் 90-க்கும் மேற்பட்டோர் பயணித்ததாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

காத்மண்டு விமானம் நிலையம் அருகே தரையிறங்கிய போது விமானம் விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் 77 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை 17 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானம் விழுந்து தீப்பிடித்து எரிந்து வருகிறது. தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். மீட்புப் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த விமான விபத்து மோசமான வானிலை காரணமாக இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தையடுத்து காத்மண்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. (இ-10)



## தாதியக் கற்கைகளின் பணிப்பாளராக முதன்முறையாக தமிழ்பெண் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபராக கடமையாற்றிய செல்வி வல்லிபுரநாதன் ரயுலா தாதிய பணிப்பாளராக நேற்று சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 1992 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத் தாதிய பயிற்சிக் கல்லூரியில் தாதிய போதனா ஆசிரியராகவும், பதில் அதிபராகவும் கடமை யாற்றினார்.



கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து 2010 ஆம்ஆண்டு வரை வவுனியா தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய பின்னர் 2011 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணத் தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபராக கடமை யாற்றிய இவர் நேற்றில் இருந்து தாதிய பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இன்று தனது கடமை களை பணிப்பாளராக பொறுப்பேற்கவுள்ளார். (இ-9)

## ஜனாதிபதி ஜப்பான் சென்றடைந்தார்



(கொழும்பு)

ஜப்பான்மற்றும் இலங்கைக்கு இடையிலான நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்தும் நோக் குடன் ஜனாதிபதி மைத்திரி ரிபால சிறிசேன அரச முறை பயணமொன்றை மேற்கொண்டு நேற்று ஜப்பான் சென் றடைந்தார்.

இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு ஜனாதிபதி ஜப்பானுக்கான பயண த்தை மேற்கொண்டு டோக்கியோவில் உள்ள நரிடா சர்வ தேச விமான நிலையத்தை சென்றடைந்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித் துள்ளது.

இந்த அரச முறை பயணத்தில் ஜனாதிபதி ஜப்பான் நாட்டின் மன்னர் அகி ஹினோ பேரரசரையும் மிசிகோ மகா ராணியையும் சந்திக்கவுள்ளதுடன், ஜனாதிபதிக்கு அந்நாட்டின் உயர் கௌரவத்தை வழங்கி உத்தியோக பூர்வமாக வரவேற்கும் நிகழ்வு நாளை 14ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவுக்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற வுள்ளது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் கலாசார உறவுகளை பலப்ப டுத்துவது குறித்து விரிவாக கவனம் செலுத்தப்படவுள்ளது.

விசேட வர்த்தக, முதலீட்டு மாநாட்டிலும் ஜனாதிபதி பங்குபற்றவுள்ளதுடன், ஜெயிக்கா நிறுவனத்தின் தலை வர், ஜப்பான் வர்த்தக சங்கம் மற்றும் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக சங்கம் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் ஜனாதிபதி சந்திக்க வுள்ளார்.

ஜப்பான் விஜயத்தின் போது ஜப்பானில் உள்ள இலங்கை பௌத்த நிலையத்தின் தலைமை நாயக்க தேரரையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளதுடன், அந்நாட்டின் நவீன கழிவு முகாமைத்துவ நிலையத்தையும் பார்வையிடவுள்ளார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இப்பயணத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டுள்ளனர். (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருந்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## மாகாணப் பாடசாலைகளில் பால்நிலை சமத்துவக்கல்வி

### வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளில், பால்நிலை சமத்துவக்கல்வி மற்றும் பாலியல் சமத்துவக்கல்வியை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் (JSAC) ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்கா மைதானத்தில் இடம் பெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலைகளில் தரம் ஒன்றில் இருந்து உயர்தரம் வரை பால்நிலை சமத்துவக் கல்வியை படிப்படியாக புகுத்துவதுடன் பாலியல் சமத்துவக்கல்வியையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை முக்கியமான கோரிக்கை யாகவுள்ளது. எழுத்தில் அந்த கோரிக்கை தர வேண்டும். அதை எமது அமைச்சர்களுக்கு அனுப்பி அவர்களின் கருத்தை அறிந்த பின்னர் அலுவலர்களுடன் பேசி உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

மேலும் இன்று "சர்வதேச மகளிர் தினம்" என்பது பலருக்கு பலவிதமான அர்த்தங்களை ஏற்படுத்தி வருவதைக் காண்கின்றோம். அதாவது பெண்களின் சமஉரிமை பேணப்படுவதை வலியுறுத்தும் நாளாகவும், ஆண்களுக்கு சவாலாக மாற வேண்டிய ஒரு நிலையைக் குறிப்பதற்கான நாளாகவும், பெண்களுக்கு சிறப்புரிமைகள் கிடைக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பதாகவும், பெண்களின் சுதந்திர நாளாகவும், பிள்ளைகள் பெறுவதைத் தவிர்த்து தாம் செய்யும் அனைத்தையும் ஆண்கள் இனிச்செய்ய வேண்டும் என்று வலியுறுத்த வேண்டிய நாளாகவும் இந்த நாளைப் பார்ப்பதுடன் மேலும் பல கருத்துக்கள் இந்நாளையொட்டி முன் வைக்கப்படுகின்றன.

ஆனால் நாங்கள் ஒன்றை மனதில் வைத்திருக்க வேண்டும். இயற்கையின் படைப்பின் தன்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்மை பூரணப்படுத்தப்படுவது தாய்மையில். தாய்மையின் அதிவிசேட குணாம்சம் பரிவும், அன்பும், அரவணைப்புமே. ஆகவே இயற்கையோடு இயைந்த வாழ்க்கையில் ஈடுபடுவதே பெண்மைக்கு அணிகலனாகும். அதைவிடுத்து ஆண்கள் செய்யும் அனைத்தையும் நாமும் செய்வோம் என்று ஒருவித சவாலாக வாழ்க்கையை எதிர்கொள்வது பெண்மைக்கு முரண்பாடுடையதாகப் பெண்களை மாற்றிவிடும். பெண்மை நிலையைப் பாதுகாத்துக் கொண்டே சம உரிமைகளைப் பெற பெண்கள் முன்வர வேண்டும்.

பெண்களுக்குச் சம உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும். ஆண்களுக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் வழங்கப் பட வேண்டும். ஆனால் பெண்கள் ஆண்களாகவோ ஆண்கள் பெண்களாகவோ மாற எத்தனிக்கக்கூடாது. இயற்கை அவர்களுக்கு கொடுத்த சிறப்பியல்புகளைப் பேணிக் கொண்டே இரு சாராரும் சம உரிமைகளுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

யதார்த்த நிலைக்கு எதிர் நிலையொன்றை ஏற்படுத்துவதாகவோ அல்லது எதிர்த் தாக்கத்தை உண்டு பண்ணுவதாகவோ பெண்மை அமையக்கூடாது. அன்பு, பண்பு, அமைதி, பொறுமை என்பன பெண்மையின் அணிகலன்கள். அவற்றிற்கு அமைய சம உரிமைகளுடன் அவர்களை வாழ வைப்பதே பெண்மைக்கு நாம் செய்யும் ஆராதனையாகும்.



பெண் ஆணாக மாறுவதில் பெண்மைக்கும் அழகில்லை. ஆண்மைக்கும் அழகில்லை. அதே நேரம் பெண் ஒடுக்குமுறை ஆண் மக்கள் மத்தியிலே இன்றும் இருந்து வருகின்றது என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது. பெண்ணானவள் அச்ச உணர்வின்றித் தனியாக நடமாடக் கூடியவளாக இன்னும் மாற்றம் பெறவில்லை. சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் உதட்டளவில் கூறப்படுகின்ற உறுதி மொழிகளாக இல்லாது பெண்களைக் கௌரவிக்கவும் பெண் முயற்சியாளர்களைப் பாராட்டவும், பெண் சுதந்திரத்தைப் போற்றவும் ஏற்ற ஒரு சூழலை உருவாக்குவதாக அமைய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் இவ்வாரம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாகவும் பெறுபேறுகள் இந்த வாரம் அளவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு சுமார் 6 இலட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### டி வில்லியர்ஸ், ரபாடா அசத்தல்

# அவுஸ்திரேலிய அணியின் அராஜக வாய்ப் பேச்சுக்கு போர்ட் எலிசபெத்தில் பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா

டர்பன டெஸ்டில் வெறிநாய்கள் போல அவுஸ்திரேலிய வீரர்கள் காட்டிய அராஜக வாய்ப் பேச்சுக்கு போர்ட் எலிச்பெத் டெஸ்ட் வெற்றி மூலம் தக்க பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா.

இப்போட்டியில் 6 விக்கெடடுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா 2 போட்டிகள் எஞ்சியிருக்கும் நிலையில் தொடரை 1-1 என்ற கணக்கில் சமப்படுத்தியது.

போட்டியின் நாணயச் சழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 243 ஓட்டங்களை எடுத்ததுடன் தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 382 ஓட்டங்களை எடுத்தது.

139 ஓட்டங்கள் பின்னிலையில் தொடர்ந்து தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 239 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் 101 ஓட்டங்கள் என்ற எளிய வெற்றியிலக்குடன் தமது 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்கா 4 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை (102) 6 விக்கெட்டுக்களால் அடைந்தது.

இந்த டெஸ்ட் போட்டியில் 11 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ரபாடா ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

ஆஸியின் முதல் இன்னிங்ஸில் அபாரமான ஒரு ஸ்பெல்லில் அவுஸ்திரேலியாவின் முதுகெலும்பை உடைத்த ரபாடா, 96 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் 2வது இன்னிங்ஸில் இன்னும் அபாரமாக செயற்பட்டு 54 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அவுஸ்திரேலியாவை தலை குனியச் செய்தார்.

இவரோடு ஏபி.டி.வில்லியர்ஸ் முதல் இன்னிங்சில் ஆட்டமிழக்காமல் 146 பந்துகளில் 20 பவுண்டரிகள் ஒரு சிக்சருடன் 126 ஓட்டங்களை விளாசியதுடன் 2ஆவது இன்னிங்ஸில் 28 ஓட்டங்களை எடுத்தார்.

5 விக்கெட்டுக்கள் கைவசமிருந்த நிலையில் 41 ஓட்டங்கள் முன்னிலையுடன் நேற்றைய 4ஆம் நாள் ஆட்டத்தை தொடர்ந்தது அவுஸ்திரேலியா.

அபாய வீரர் மிட்செல் மார்ஷ் 39 ஓட்டங்களுடன் இருந்தார். ஆனால் ரபாடா ஆவேசத்தின் முன் மிட்செல் மார்ஷால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. ஒரு பந்தை பிட்ச் செய்து உள்ளே கொண்டு வர வேகமும் ஸ்விங்கும் கோணமும் சேர்ந்து இடையில் புகுந்து ஸ்ரம்பைத் தகர்த்தது. 45 ஓட்டங்களில் மிட்சல் மார்ஷைக் காலி செய்தார் ரபாடா.

அதன்பின் பட் கம்மின்ஸை 5 ஓட்டங்களுடன் டி புருய்னிடமும் மிட்செல் ஸ்ரார்க்கை டி ஹொக்கிடம் பிடிகொடுத்து வெளியேற்றிய ரபாடா, இப்போட்டியில் 150 ஓட்டங்களைக்கொடுத்து 11 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.



தனது 28ஆவது டெஸ்ட் போட்டியிலேயே 4ஆவது முறையாக 10 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார் ரபாடா.

இவ்வாறு அபாரமாக செயற பட்ட ரபாடா, ஆஸி அணித் தலைவர் ஸ்மித்தை தோளில் இடித்தமையால் தகுதி இழப்புப் புள்ளிகளைப் பெற்றதினால் கேப் டவுண் டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார். இதனால் சொந்த மண்ணில் அவுஸ்திரேலி யாவை வீழ்த்தும் தென்னா பிரிக்காவின் வாய்ப்பு சிக்கலாகியுள்ளது.

நேதன் லயன் 5 ஓட்டங்களில் என்ஜிடி பந்தில் டி ஹொக்கிடம் பிடிகொடுக்க, ஹேசில்வுட் 17 ஓட்டங்களில கேசவ் மஹராஜ் பந்தில் டீப் மிட்விக்கெட்டில் பிடி ஆக, 100 ஓட்டங்கள் முன்னிலையில் அவுஸ்திரேலியாவின் 2ஆவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

101 ஓட்ட இலக்கை விரட்டகளமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரர் மார்க்ரம் 7 ஓட்டங்களில் இருந்தபோது ஹேசில்வுட் பந்தில் கொடுத்த பிடியை மிட்சல் மார்ஷ் ஸ்லிப்பில் கோட்டை விட்டார். நேதன் லயனின் அருமையான பந்து வீச்சுக்கு அவரிடமே டீன் எல்கர் 5 ஓட்டங்களில் வெளியேறினார். மார்க்ரம் அருமையான சில ஷொட்களுடன் 21 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹேசில்வுட் பந்து ரிவர்ஸ் ஆகும் என்ற அச்சத்தில் ஆடுவது போல் ஆடினார். பந்தும் உள்ளே வந்து வெளியே செல்ல எட்ஜ் ஆகி ஸ்மித்தின் சமயோசிதமான பிடியெடுப்பால் ஆட்டமிழந்தார்.

டி வில்லியர்ஸ் இறங்கினார். எந்த ஒரு ஆஸி நெருக கடிக்கும் அடிபணியப் போவதில்லை என்று உறுதிபூண்டு 4 பவுண்டரிகள் ஒரு சிக்சரை விளாசி 26 பந்துகளில் 28 ஓட்டங்களை விரைவாக எடுத்தார். அம்லாவுடன் 49 ஓட்டங்கள் கூட்டணி அமைக்க தென்னாபிரிக்கா வெற்றி இலக்குக்கு அருகில் வந்தது. அம்லா 27 ஓட்டங்களில் கம்மின்ஸ் பந்தில் விக்கெட் காப்பாளரிடம் பிடியானார். நேதன் லயன் இந்தத் தொடரில் முதல் முறையாக பந்து வீசி டி வில்லியர்ஸை வீழ்த்திய பந்துவீச்சாளரானார். அணித் தலைவர் டு பிளசிஸ் (02), டி புருய்ன் (15) வெற்றியை உறுதி செய்தனர்.

ஒரு அருமையான, தரமான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி கேப் டவுணில் ஆரம்பமாகிறது.

# இந்தியாவுக்கு 2ஆவது வெற்றி இலங்கையை வீழ்த்தி பதிலடி

தாகூரின் அசத்தலான பந்துவீச்சும் மனிஷ் பாண்டே, தினேஷ் கார்த்திக்கின் இறுதி நேர துடுப்பாட்டமும் கைகொடுக்க, இலங்கைக்கு எதிரான முத்தரப்பு 'ரி20' தொடரின் 4ஆவது லீக் போட்டியில் இந்தியா 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கொழும்பில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ரி20 தொடர் நடக்கிறது.

முதல்லீக்போட்டியில்இலங்கையிடம் தோல்வியடைந்த இந்திய அணி, பங்களாதேஷை வீழ்த்தி எழுச்சி கண்டது. இந்நிலையில் நேற்று நடந்த 4ஆவது லீக் போட்டியில் இலங்கை - இந்திய அணிகள் மீண்டும் மோதின.

**மழையால் தாமதம்**

மழையால் தலா 19 ஓவர் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது. இந்திய அணியில் ரிஷாப் பன்ட் நீக்கப்பட்டு லோகேஷ் ராகுல் சேர்க்கப்பட்டார். தாமதமாக பந்துவீசியதால் தடை விதிக்கப்பட்டுள்ள இலங்கை அணியின் வழமையான அணித் தலைவர் தினேஷ் சண்டிமலுக்கு பதிலாக லக்மல் தேர்வானார். பொறுப்புத் தலைவராக திசர பெரேரா நியமிக்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணியின்



பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா, முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**மென்டிஸ் அரைச்சதம்**

இலங்கை அணிக்கு குணதிலக (17) சுமாரான ஆரம்பம் கொடுத்தார். குசல் பெரேரா (3) ஏமாற்றினார். உபுல் தரங்க (22), பொறுப்புத் தலைவர் திசர பெரேரா (15) பெரிய அளவில் சோபிக்கவில்லை. ஜீவன் மெண்டிஸ் (1) ஏமாற்றினார். பொறுப்பாக ஆடிய குசல் மெண்டிஸ் (55) அரைச்சதம் கடந்தார். அகில தனஞ்செய (5) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஷானக (19) ஆறுதல் கொடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 19 ஓவரகளில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்கள் எடுத்தது.

சுரங்க லக்மல் (5), பெர்ணான்டோ (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஷர்துல் தாகூர் 4, வாஷிங்டன் சுந்தர் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

**சுலப வெற்றி**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு பொறுப்புத் தலைவர் ரோகித் சர்மா (11), ஷிகர் தவான் (8) ஜோடி ஏமாற்றியது. ராகுல் (18) சோபிக்கவில்லை. ரெய்னா (27) ஆறுதல் கொடுத்தார். பின் இணைந்த கார்த்திக், மனிஷ் பாண்டே ஜோடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.

இந்திய அணி 17.3 ஓவரகளில் 4 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கார்த்திக் (39), பாண்டே (42) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதன்மூலம் முதல் போட்டியில் இலங்கையிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுத்தது இந்தியா.

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை மகேஸ்வரன்



கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த பொன்னுத்துரை மகேஸ்வரன் நேற்று *(12.03.2018)* திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பரராசசிங்கம் - இரத்தின பூவதி தம்பதிகளின் மருமகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாதேவன், இரத்தினசபாபதி, பத்மநாதன், பரமேஸ்வரி, சுப்பிரமணியம், சந்திரசேகரம், இராசேந்திரம், வேலாயுதம்பிள்ளை மற்றும் மகேஸ்வரி, இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சத்தியபாமா மற்றும் பத்மினிதேவி, விசயலட்சுமி, குணபாலசிங்கம், உதயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் றஜனி (சூட்டி), றஜிதா (ராதா), திலீப்குமார் (திலிஸ்), பிரியதர்சினி (ராசி), உமாநந்தினி (உசா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியரூபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் மற்றும் சோபனா, பிரபாகரன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துவாரகன், சுஜன், தர்சிகா, தனுஷியா, பிரணவன், கபில்ராஜ், கனிமொழி, கலைப்பிரியா, நிந்துஜா, கம்சாயினி, ஹர்வின், கஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று *(13.03.2018)* செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(3209)

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:- குடும்பத்தினர்
077 372 5459 (துவா), 075 069 5639 (திலிஸ்)

# கண்டியில் மீண்டும் பரபரப்பு பெற்றோல் குண்டுத் தாக்குதல்



கண்டி பிலிமத்தலாவ தாந்துர பகுதியில் முஸ்லிம் வர்த்தகரின் பலசரக்குக் கடை மீது நேற்று முன்தினம் இரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொலிஸாரின் உதவியுடன் உடனடியாகத் தீ அணைக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# முட்டை இறக்குமதி இல்லை

தேசிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இலங்கையில் முட்டை உற்பத்தி செய்யப்படுவதாகவும் எனவே, முட்டை இறக்குமதிக்கு அவசியமில்லையென சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெனரல் நிஹால் வெடிசிங்க கிராமிய பொருளாதார அமைச்சர் பீ.ஹரிசனிடம் தெரிவித்துள்ளார். (இ-7)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடமாகாண மகளிர் விவகாரம் சமூக சேவைகள் அமைச்சினால் நடத்தப்பட்ட கட்டுரை ஆக்கப் போட்டியில் வலய மட்டத்தில் கனிஷ்ட பிரிவில் யாழ். சன்மார்க்க மகா வித்தியாலய மாணவி இராமச்சந்திரன் .அனுசியா முதலாம் இடம்பெற்றுள்ளார். (இ)

# மரண அறிவித்தல்

## அமரர் திரு. கந்தையா- வல்லிபுரம்



தோற்றம்:- 1924.03.05
மறைவு:- 2018.03.11

அம்பலவன்பொக்கணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.கந்தையா-வல்லிபுரம் அவர்கள் 2018.03.11 ஆம் திகதி இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற குஞ்சுப்பிள்ளையின் அன்புக் கணவரும் அரிநாகலட்சுமி, அன்னலிங்கம் (தலைவர் முல்/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்), புஸ்பராணி, கமலாம்பிகை, சந்திராதேவி, லிங்கேஸ்வரி (ஆசிரியை, புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்), விவேகானந்தலிங்கம் (பிரதம அஞ்சல்மா அதிபதி நிர்வாகம்), அமரர் சறோசாதேவி, யோகேஸ்வரி (ஆசிரியை, ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாசாலை புதுக்குடியிருப்பு), புஸ்பலதா (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை), சிவானந்தரூபி (ஆசிரியை, புதுமாத்தளன் றோ.க.வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.03.2018 இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் அம்பலவன்பொக்கணை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். (சி-1863)

அம்பலவன்பொக்கணை, முல்லைத்தீவு.

தகவல் குடும்பத்தினர்.

# 47 ஆவது பிறந்த தினமும் 33 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும்

## அமரர் துரைசிங்கம் சரவணன்துரை



மண்ணில் மகனாய்
27.04.1971

மனதில் நினைவாய்
13.03.1985

அன்பென்னும் சாகரத்தில்
அனுதினமும் திளைத்திருந்தோம்
ஆறாத துயர் தந்து
ஆண்டவனே பறித்தானோ

கண்மணியே உனைப் பிரிந்து
காலங்கள் பல கடந்து
கதறியழ வைத்துவிட்டாய்
கலங்குகிறோம் நெடுநாளாய்

உன்னிடத்தில் வைத்த அன்பு
உயிருள்ள வரை நீளும்
ஒரு நாளுன் முகம் காண
வழிபார்த்து தேடுகின்றோம்

வருவாயோ கண்மணியே- உன்
வதனமொரு முறை காண...

திருச்செந்தூர், நாவலம்பதி, அச்சுவேலி. (3194)

அப்பா, அம்மா, பெரியம்மா. குடும்பத்தினர்.

# இராசி பலன்

13.03.2018

மாசி 29, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 2.27 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 1.12 மணி வரை
சுபநேரம் 10.52-12.22 மணிவரை
இராகுகாலம் 3.22-4.52 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

கிரகநிலை: சுக். புத; சூரி; சந். கேது; சனி. செவ்; குரு; ராகு
சந்திராஷ்டமம்: திருவாதிரை

**மேடம்:** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் மேன்மையுண்டு, உயர்வும் கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சுணங்கிள காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடிவுக்குவரலாம்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** வராத உறவுகள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிம்மம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், சேமிப்புக்கள் உயர்வடையும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**துலாம்:** வீட்டை சிரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், நம்பி வந்தவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பாக்கிகள் வசூலிக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** தொழில்ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சிகாண வேண்டிய நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறும்.

**கும்பம்:** உறவுகளின் நலன்கருதிய சுபசெலவுகள் ஏற்படலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக நடைபெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

# புங்குடுதீவில் மாடுகள் கடத்தல்; கட்டுப்படுத்தக்கோரி கவனயீர்ப்பு







(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மாடுகள் கடத்தப்படுவதை பொலிஸார் கட்டுப்படுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் முன்பாக மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் புங்குடுதீவு மற்றும் அதனை அண்டிய இடங்களைச் சேர்ந்தமக்களால் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தில் மத வேறுபாடுகளற்று அனைத்து மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

ஊர்காவற்றுறை மற்றும் புங்குடுதீவு பகுதியில் நீண்டகாலமாக இந்த சட்டவிரோத மாடு கடத்தல் நடவடிக்கை நடைபெறுகின்றது. பசுமாடுகள், எருதுகள் என வேறுபாடின்றி இறைச்சிக்காக கடத்தப்படுகின்றது. எனினும் பொலிஸாருடைய நடவடிக்கை திருப்தியாக இல்லாததால் மாடு கடத்தல் நடவடிக்கை தொடர்கிறது.

இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக பலமுறை உறுதியளிக்கப்பட்ட போதிலும், தற்போது வரை அங்கு சட்டவிரோத மாடு கடத்தல் இலகுவான முறையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் முன்பாக மேற்படி இடங்களை சேர்ந்த மக்கள் ஒன்றுகூடிஅமைதி வழியிலான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

நாங்கள் இந்த பசுமாடுகளை நம்பித்தான் அன்றாட வாழ்க்கையை நடத்தி செல்கின்றோம். ஆனால் திடீரென எமது மாடுகள் காணாமல் போகின்றன. இவை யாழ். நகர் பகுதிகளிலுள்ள இறைச்சி கடைகளுக்காகவே கடத்தப்படுகின்றன. இவ்வாறு எமது மாடுகளை நாங்கள் இழந்து விடுவதால் வாழ்வாதாரத்திற்கு பெரும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரிடம் கேட்டால் தமக்கு ஆளணிப் பற்றாக்குறை, வாகனப் பற்றாக் குறை காணப்படுகின்றது எனக் கூறுகின்றனர். அப்படியானால் நாங்கள் இனி யாரிடம்போவது? எனவே இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)







தமிழ் தாய் மன்றம் லங்கா மாதா அமைப்புடன் இணைந்து நடத்திய இலவச மருத்துவ சேவை அண்மையில் திருநெல்வேலி புதிய செங்குந்தா வீதியில் நடைபெற்றது. இதில் இயற்கை வைத்திய உணவு ஆலோசனை முகாம், யாழ்.மாநகர சித்த ஆயுள்வேத வைத்தியர்களால் நோய்கள் பரிசோதனை செய்யப்பட்டு மருந்துகளும் வழங்கப்பட்டன. நீரிழிவு நோய், இரத்த அழுத்தம் என்பனவும் பரிசோதிக்கப்பட்டது. இந் நிகழ்வில் 100 பேருக்கு இலவச கண் பரிசோதனை செய்து முற்றிலும் இலவசமாக 100 மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன். சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், புலவர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாண தமிழ்ச்சங்கத்திற்கு புதிய நிர்வாகத்தினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நல்லை ஆதீனக் கலாமண்டபத்தில் நடைபெற்றபோது சங்கத்திற்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி பெருந்தலைவர் - பேராசிரியர் அ.சண்முகதாஸ், தலைவர் - ச.லலீசன், செயலாளர் - இ.சர்வேஸ்வரா, நிதிச் செயலாளர் - பேராசிரியர் தி.வேல் நம்பி, உபதலைவர்கள் - பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி ஆறு.திருமுருகன், அருட்பணி ஜெறோ செல்வநாயகம், இரா.செல்வவடிவேல், உபசெயலாளர்கள் - ந.செல்வஅம்பிகை, கு.ரஜீவன் இவர்களுடன் கலாநிதி ஜெ.இராசநாயகம், கலாநிதி சுகந்தி ஸ்ரீமுரளிதரன், சாந்தினி அருளானந்தம் கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், சி.ராஜ்குமார், த.கருணாகரன், பொ. அரவிந்தன், வேல். நந்தகுமார், ந.கணேசமூர்த்தி, பா.பாலகணேசன் அ.வௌநந்தி, ந.ஐங்கரன் சி.சிவஸ்கந்தசிறி, லோ. துஷிகரன், கு.பாலஷண்முகன் நா.வை மகேந்திரராசா (குமரிவேந்தன்) ரதி சந்திரநாதன், கௌரி முகுந்தன் தனுசியா, யசிதரன், செல்வதி அம்மா, விஜயதர்சினி ஆகியோரை உள்ளடக்கிய 21பேர்கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## கவிதைக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் ஏற்பாட்டில் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ)

## இலங்கை இராணுவத்தினருக்கு வெளிநாடுகளில் நிலவும் கிராக்கி

### யாழ்.கட்டளைத் தளபதி தகவல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் படையினருக்கு வெளிநாடுகளில் பெரும் கிராக்கி நிலவி வருவதாக யாழ்ப்பாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்றுள்ள நாடுகள் பலவற்றில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளுக்காக இவ்வாறு இலங்கைப் படையினருக்கு கிராக்கி நிலவி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் நிலக்கண்ணி வெடி அகற்றும் பிரிவினரின் திறமைகள் காரணமாக இவ்வாறு கிராக்கி நிலவி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

உரிய முறையிலும் பாதுகாப்பான வழிமுறைகளிலும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதில் இலங்கை இராணுவத்தினருக்கு சிறந்த திறமைகள் காணப்படுகின்றன.

மிகவும் கடினமான கால விரயமும் பண விரயமும் ஆகும் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளின் போது இலங்கை, பாரிய வளத்திற்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கி வருவதாக யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். (இ-7)











யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் மகளிர் தின விழா பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் கலந்து கொண்டார். (படங்கள்: சக்தி)

# 'பெண்களின் மேம்பாட்டிற்கு வலுச்சேர்ப்போம்' நல்லூரில் நேற்று சர்வதேச மகளிர் தினம்



(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் "பெண்களின் மேம்பாட்டிற்கு வலுச்சேர்ப்போம்" எனும் தெனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் நேற்று நல்லூர் சங்கிலியன் பூங்கா மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பெண்களின் மேம்பாட்டுக்கு வலுச்சேர்ப்பதற்கு அரசியல், மனித வளமும் பொருளாதாரமும் ஊடகத்துறை, பெண்கள் உரிமை, பால் நிலை வன்முறைகளை ஒழித்தல், வலையமைப்பு ஆகிய துறைகள் எவ்வாறான பங்களிப்பை வழங்க முடியும் என்பது தொடர்பாக குழுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அதனை தொடர்ந்து நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பெண் வேட்பாளர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்றதுடன், சாதனை பெண்கள் கௌரவிப்பு இடம்பெற்றது.

அதில் மாடு வளர்ப்பில் சாதனை நிலைநாட்டிய வீரகுமாரி சிவதாஸ், வாகன சாரதியாக பணியாற்றும் அஞ்சலா கோகிலகுமார், கோலூன்றி பாய்தலில் சாதனை நிலைநாட்டிய மாணவி சந்திரகுமார் ஹரினா, இரு கைகளையும் இழந்து கணனித் துறையில் சாதனை நிலைநாட்டும் செபஸ்ரியாம்பிள்ளை செல்வநாயகி, நடைபெற்று முடிந்த க.பொ.த. உயர்தரப் பிரிவில் சாதனை புரிந்த செந்தில்நாதன் கமலேஸ்வரி, பளுதூக்கல் போட்டியில் சாதனை படைத்து வரும் மாணவி விஜயபாஸ்கர் ஆசிகா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வியாபாரக் கூடங்கள் அமைக்கப்பட்டு கண்காட்சி நிகழ்வும் இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இலங்கைக்கான கனேடிய தூதுவர் டேவிட் மக்கிரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# இம்முறை O/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு முக்கிய அறிவித்தல்

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அந்த திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என அதன் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

இதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி , 15 வயது பூர்த்தியான 'மாணவர்களுக்கு இவ்வாறு தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளது.

இவ்வருடம், பாடசாலை மாணவர்களுக்காக சுமார் மூன்று இலட்சத்து 50 ஆயிரம் அடையாள அட்டைகளை விநியோகிக்க எதிர்ப்பார்த்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்த மூவர் கைது

(கொழும்பு)

குளியாப்பிட்டி பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் வர்த்தகர்களுக்கு சொந்தமான மூன்று வர்த்தக நிலையங்களுக்கு தீவைத்துக்கொளுத்தி சேதம் விளைவித்த 3 சந்தேகநபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளியாப்பிட்டி இலுகேஹன, கல்பொல மற்றும் அமுனுவெல ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதோடு, இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேகநபர்களையும் பொலிஸார் தேடிவருகின்றனர். (இ-7)

# உப்பு பக்கெட்டில் இறந்த தவளை

(கொழும்பு)

வீட்டுப் பாவனைக்காக, வர்த்தக நிலையமொன்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உப்பு பக்கெட் ஒன்றுக்குள், இறந்த தவளை காணப்பட்ட சம்பவமொன்று, பொலநறுவை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆயுர்வேத வைத்தியரான கே.ஜீ.ரவிந்து குமார என்பவர் கொள்வனவு செய்த உப்பு பக்கெட்டிலேயே மேற்படி தவளை காணப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொள்வனவு செய்யப்பட்ட இந்த உப்பு பக்கெட்டை நேற்று பாவனைக்கு எடுத்த போதே அதற்குள் தவளையொன்று காணப்பட்டதென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உப்பு பக்கெட், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுவதென்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# தனங்கிளப்பில் 100 ஏக்கரில் உப்பளம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி தனங்கிளப்புப் பகுதியில் சுமார் 100 ஏக்கர் அரச நிலப்பரப்பில் உப்பளம் அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நேற்று மதியம் சாவகச்சேரி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இணைத் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே யாழ்ப்பாண உப்பள நிறுவனம் குறித்த அனுமதியினைக் கோரியிருந்தது. இதன்போது முன்னர் குறித்த உப்பளம் அமைப்புக்கு மீனவர் அமைப்புக்களும் அப்பகுதி மக்களும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டிய வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் சுற்றுச் சூழல் அதிகார சபையின் அறிக்கையின்படி குறித்த பகுதியில் உப்பளம் அமைக்கப்படுவதால் மீன்பிடிக்கோ அல்லது சுற்றாடலுக்கோ பாதிப்பு ஏற்படுமிடத்து அனுமதி இரத்துச் செய்யப்படும் என்ற கடும் நிபந்தனையுடன் குறித்த உப்பளம் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உப்பளம் அமைப்பதனால் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 100 பேருக்கு பருவகால வேலை வாய்ப்பும் 25 பேருக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-89)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெறும். (இ)

# ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுடன் வீதிக்கிறங்கத் தயார்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

பேஸ்புக் பயன்படுத்தும் உரிமையை உறுதி செய்வதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுடன் வீதிக்கிறங்கி போராட தயாராக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் தெரிவித்தார்.

கண்டி பிரதேசத்தில் ஏற்பட்ட முறுகல் நிலை தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டுள்ளதாகவும், நாளை அவசர காலச் சட்டமும் நீக்கப்பட உள்ளதாகவும் கூறியுள்ள அவர் பேஸ்புக் மீதான தடை இன்னும் நீக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.


இனவாத முறுகளை தடுப்பதற்காக என்று கூறிக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிரான சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்த முற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த தடை எவ்விதத்திலும் நடைமுறைச் சாத்தியமில்லை என்றும், தற்போது இளைஞர், யுவதிகள் திருட்டுத்தனமாக பேஸ்புக் பயன்படுத்த நேர்ந்துள்ளதாகவும் கூறியுள்ள அவர், வெறுப்பு பிரசாரங்களை பரப்புவதற்கு பேஸ்புக் பயன்படுத்தப்படுவதாக கூறி அதனை தடை செய்துள்ளமை வேடிக்கை என்றும் உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு, மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 48<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/8338 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/ அவுஸ்திரேலியா<br>தொ.இ: G/8359 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: செவ் 8 இல்<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: B/8339 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:CIMA, ACMA, CGMA/வங்கியாளர்<br>தொ.இ: G/8360 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 55 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தொழிலதிபர்<br>தொ.இ: B/8340 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 34 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8370 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 21 செவ் 1 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:A/L/சாரதி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/8342 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: G/8373 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகன் தலைமையில் ஆரம்பமாகி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்- பனிக்கன்குளம் , கண்டாவளை செய்தியாளர்கள்)

# கர்ப்பிணிப் பெண்ணைக் காப்பாற்றிய பொலிஸார் ஒருவர் கௌரவிக்கப்பட்டார்

(கிளிநொச்சி)

கர்ப்பிணிப் பெண்ணை காப்பாற்றி பாதுகாப்பான பிரசவத்திற்கு உதவி புரிந்த பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 8 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.




சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணித் தாயொருவர் பிரசவத்திற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்று கொண்டிருந்த வேளை பயணித்த ஆட்டோ இயந்திரக்கோளாறு ஏற்பட்டு இடைநடுவில் நின்றிருந்தது.

இரவு வேளையென்பதால் பயணத்தை தொடர முடியாது பரிதவித்து நின்றவர்களுக்கு அப்போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த செனிவிரட்ண என்ற பொலிஸார் உதவியிருந்தார்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்றிருந்த இச்சம்பவத்தின் போது, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த செனிவிரட்ண(அமில)என்ற பொலிஸார் வாகனத்தில் இரவுநேர வீதிக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இவ்வாறு ஆட்டோ பழுதடைந்து அங்கு நின்றவர்களை கண்டுள்ளார்.

உடனடியாக தனது வாகனத்தில் ஏற்றி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்க உதவியிருந்தார். வைத்தியசாலைக்கு செல்லும் வழியிலேயே வாகனத்தில் குழந்தை பிறந்திருந்தது.

குறித்த நேரத்தில் இவரின் உதவி கிடைத்தமையால்தாயும் சேயும் பாதுகாக்கப்பட்டிருந்தனர்.

தற்போது பொலநறுவ பகுதியில்கடமையாற்றிவரும் குறித்த பொலிஸாரின் மனிதநேய செயற்பாட்டை மதிப்பளிக்கும் வகையில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரனின் அறிவுறுத்தலின் பிரகாரம் பிரஸ்தாப பொலிஸார் வரவழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மனிதநேய செயற்பாட்டை கௌரவிக்கும் முகமாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் பொன்னாடை அணிவிக்க, வடக்கு மாகாண புனர்வாழ்வளித்தல் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் நினைவுப் பரிசினை வழங்கி சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# பரந்தன் - பூநகரி வீதியில் ஹயஸ் வாகனம் தடம்புரள்வு

## நான்கு பேர் காயம்



(பரந்தன்)

பரந்தனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஹயஸ் வாகனம் பரந்தன் - பூநகரி வீதியில் நேற்றுக் காலை 6 மணியளவில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இதில் வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்தது.

இதன்போது வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

குறித்த விபத்து அதிவேகத்தினால்இடம்பெற்றுள்ளது என பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் இருந்து தெரிய வருகின்றது. அத்துடன் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)




# வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகக் கட்டடத்தின் மேல் பாறி வீழ்ந்தது பாரிய மரம்

(குருமன்காடு)

வவுனியாவில் பெய்த வந்த மழை மற்றும் கடும் காற்றுடனான காலநிலை காரணமாக பாரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகக் கட்டடத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளது.



நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கண்டி வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் அலுவலக வளாகத்தின் அலுவலகக் கட்டடத்தில் பாரிய மரம் ஒன்று பாறி வீழ்ந்துள்ளது. இதனால் அலுவலகத்தின் கூரைப் பகுதி , சுவர் என்பன சேதமடைந்துள்ளதுடன் கடமையில் இருந்த உத்தியோகத்தர் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# சர்வதேசத்தின் நேரடித் தலையீடு அவசியம்

# ஜெனிவா மனித உரிமைக்கூட்டத் தொடரில் கோருமாறு அனந்தியிடம் காணாமல் போனோரின் உறவுகள் வலியுறுத்து

(கிளிநொச்சி)

காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் சர்வதேச தலையீட்டை கோருமாறு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரசின் நடவடிக்கைகளால் எந்தவிதமான தீர்வு கிடைக்கப் போவதில்லை. ஆகவே, இவ்விடயத்தில் சர்வதேச தலையீட்டை கோருமாறு வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல் அமைச்சர் திருமதி.அனந்தி சசிதரனைச் சந்தித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வலியுறுத்தியுள்ளார்கள்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் நடப்பு கூட்டத்தொடரில் அமைச்சர் திருமதி. அனந்தி சசிதரன் பங்கேற்கவிருந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தவர்கள் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்கள்.

அமைச்சர் அலுவலகத்திற்கு வருகைதந்திருந்த இவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் காலத்தை இழுத்தடித்து ஏமாற்றும் வகையிலேயே உள்ளது.

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இதுவரை இவ்விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் தொடர்புடைய இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்படவில்லை.

இனியும் பொறுமையாக இருக்க முடியாது. இவ்விடயத்தில் சர்வதேசத்தின் நேரடித் தலையீடு ஒன்றே உரிய நீதியைப் பெற்றுத் தரும் என்று நம்புகின்றோம். ஆகவே, காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் பிரதிநிதியாக ஜெனிவாவில் இவ்விடயத்தை கோருமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் திருமதி. அனந்தி சசிதரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜெனிவா புறப்பட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக அபிவிருத்திக்குழு கூட்டம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இணைத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தலையில் ஆரம்பமாகின. கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் திணைக்கள தலைவர்கள், உதவிப் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொணடிருந்தனர்.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் 13 ஆயிரத்து 224 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 13 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த நாற்பதாயிரத்து 326 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்கான பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று நடைபெற்ற போதே வழங்கிய அறிமுக உரையில் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிர தேச பிரிவில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 13 ஆயிரத்து 224 குடும்பங்களைச் சேர்ந்த நாற்பதாயிரத்து 326 பேர் மீள்குடியேறியிருப்பதாகவும் இதில் ஆயிரத்து 729 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 707 மாற்றுத்திறனாளிகளும் 156 வரையான வாழ்கைத்துணைவியை இழந்தவர்களும் காணப்படுவதாக மேற்படி அறிமுக உரையில் தெரிவிக்கப்பட்டது. (2-315)

# பயிர்ச்செய்கை நிலங்களை வழங்குவதற்கு வன இலாகாவினரின் அனுமதிக்கு காத்திருப்பு

## பூநகரி பிரதேச செயலர் கிருஸ்னேந்திரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் கைவிடப்பட்ட பயிர்ச்செய்கை நிலங்களை துப்புரவு செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கு வன இலாகாவினரின் அனுமதிகளுக்காக காத்திருக்கின்றோம். அதற்கான அனுமதிகள் கிடைத்தவுடன் விரைவாக முன்னெடுக்க முடியும் என பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஸ்னேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் வாழ்ந்த 547 வரையான குடும்பங்களின் பயிர்ச்செய்கை காணிகள் கடந்தகால யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் பற்றைக்காடுகள் மண்டிக்காணப்படுகின்றன.

இந்நிலையில் தமது காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச்செய்கைகளுக்கு வழங்குமாறு இப்பகுதி விவசாயிகள் விடுத்த கோரிக்கையை தொடர்ந்து இதில் நூறு ஏக்கர் வரையான காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த டிசெம்பர் மாதம் முதல் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இதன் துப்புரவு பணிகள் கடந்த ஜனவரி மாதம் வனவள திணைக்களத்தினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரை துப்புரவு செய்து வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என ஜெயபுரம் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பூநகரி பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த மக்களுக்கான விவசாயக் காணிகளை துப்புரவு செய்து தற்காலிகமாக வழங்குவதற்கு அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டு அதன் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் கடந்த ஜனவரி மாதம் குறித்த காணிகள் வன இலாகாவிற்கு சொந்தமான பகுதி எனக் குறிப்பிட்டு புனரமைப்புப்பணிகள் அவர்களால் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனையடுத்து இவ் விடயம் சம்பந்தமாக மாவட்ட அரச அதிபர் மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெ ற்று அதற்கான கள விஜயமும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் வன இலாகாவினர் இதற்கான அனுமதிகளை வழங்குமிடத்து அந்த வேலைகளை விரைவாக முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# சோதனை செய்வதற்கு முற்பட்டவேளை போக்குவரத்து பொலிஸார் மீது தாக்குதல்

(பனிக்கன்குளம்)

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் வைத்து போக்குவரத்து பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரப் பகுதியில் இருந்து வைரவபுளியங்குளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை போக்குவரத்துப் பொலிஸார் மறித்து சோதனை செய்ய முற்பட்டுள்ளனர். இதன்போது குறித்த மோட்டார் சைக்கிள் நிறுத்தாது சென்றபோது அதனை விரட்டிச் சென்ற போக்குவரத்து பொலிஸார் வவுனியா, புகையிரத வீதியில் உள்ள பூங்கா வீதிச் சந்தியில் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். பொலிஸாரும் அதனை தடுத்து அவரை கைது செய்ய கடும் பிரயத்தனம் செய்தனர்.

சுமார் 10 நிமிடங்களாக அப்பகுதியில் போக்குவரத்து பொலிஸாரும் குறித்த இளைஞரும் கைகலப்பில் ஈடுபட்டு முரண்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு மேலதிக போக்குவரத்துப் பொலிஸார் வருகை தந்து குறித்த இளைஞரை கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதேவேளை, இச்சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தில் வேறு மூன்று மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆறு இளைஞர்கள் வவுனியா மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் வீதி சோதனை செய்ய நிறுத்திய போது நிறுத்தாது அந்தப் பொலிஸாரை சீண்டும் வகையில் தமது மோட்டார் சைக்கிளில் பல தடவை சந்திக்கு அண்மையில் வருவதும் திரும்பி ஓடுவதும் போன்ற செயற்பாட்டில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# வவுனியா பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடங்கள்

## பிரதேச செயலாளர் உதயராசா தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுவதாக பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,



வவுனியா பிரதேச செயலக பிரிவில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. குறிப்பாக எமது பிரதேச செயலகத்தில் 17 கிராம அலுவலர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த ஆளணி நிரப்பப்படாமையால் எமது சேவைகளை இலகுவாக செயற்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு பிரதேச அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்கள் கிராம அலுவலர் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.




# முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க வவு.பேருந்து நிலையம் முன்பாக பாதசாரிகள் கடவை அமைப்பு

(குருமன்காடு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோளுக்கு இணங்க வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக பாதசாரிகள் கடவை அமைக்கப்பட்டுள்ளது.



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, வவுனியாவில் 195 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பேருந்து நிலையம் முன்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வவுனியா நிறைவேற்று பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் புதிய பாதசாரிகள் கடவை அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் பாதசாரிகள் கடவை இல்லாமையால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமையும், விபத்துக்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-281)

# துவிச்சக்கரவண்டி-பாரவூர்தி விபத்து; ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அருகேயுள்ள சுற்றுவட்ட வீதியில் பாரவூர்தி-துவிச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது. இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஹொறவப்பொத்தானை வீதியூடாக வவுனியா புதிய பேருந்து நிலையம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி மீது கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பாரவூர்தி மோதியதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# வாவெட்டிக்குளத்தை ஆழப்படுத்தி விவசாய நடவடிக்கைக்கு உதவுக!

## விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு வாவெட்டிக்குளத்தை ஆழப்படுத்தி புனரமைத்துத்தருமாறு இக்குளத்திற்குட்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வாவெட்டிக் குளத்தின் கீழுள்ள பிரம்படி வாவெட்டி வெண்ணாவரசு, பாசிமோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 200 ஏக்கர் வரையான நிலங்களுக்கு நீரை வழங்கக்கூடிய ஓர் குளமாக காணப்படுகின்ற போதும் கடந்தகால யுத்தம் காரணமாக குளத்தின் உட்பகுதி மண் நிரம்பிக் காணப்படுகின்றது. அத்துடன் குளத்தின் அணைக்கட்டும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இதனால் குளத்தில் போதியளவு நீரைச் சேகரிக்க முடியாமலும் முழுமையாக 200 ஏக்கர் வயல் நிலங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்ய முடியாமலும் காணப்படுகின்றது.

இக்குளத்தை ஆழப்படுத்தி புனரமைத்துத் தருமாறு கோரியுள்ள இப்பகுதி விவசாயிகள் முத்தையன்கட்டு குளத்திலிருந்து கழிவுநீரைக் கொண்டு வரும் பேராற்றின் கிளையாறுகளில் ஒன்றாகக் காணப்படும் கச்சைக்கொடியாற்றை திசைதிருப்பி வாவெட்டிக்குளம், இயங்கன்குளம் ஆகிய குளங்களுக்கு நீரைக் கொண்டு வரமுடியும். இவ்வாறு கச்சைக்கொடி ஆற்றை திசைதிருப்பி குளத்திற்கு தண்ணீர்வரத்தை அதிகரிப்பதுடன், குளத்தை உரிய முறையில் புனரமைப்பதன் மூலம் இக்குளத்தின் கீழான விவசாயிகளாகிய தாங்கள் நன்மையடைய முடியும் எனவும் இதனைப் புனரமைத்துத் தருமாறு இப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)





முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாச கட்டடம் புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கலந்து கொண்டு கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்துள்ளதுடன் கட்டடத்தின் பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார். (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வன்முறையில் ஈடுபட்ட 230 பேர் கைது!

## கண்டியில் மட்டும் 161 பேர் சிக்கினர்




(கொழும்பு)

கண்டியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையையடுத்து இதுவரையில் கண்டியில் மாத்திரம் 161 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கண்டி பகுதியை தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் மேலும் 69 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மொத்தமாக நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)




# கண்டிக்கலவரத்துக்கு கூகுளில் வழி தேடிய வன்முறையாளர்கள்



(கொழும்பு)

கடந்த சில நாட்களாக கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு சமூக வலைத்தளங்கள் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளதாக பல தரப்பினரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதற்கமைய அண்மையில் கண்டி பிரதேசத்தில் ஏற்பட்ட மோதலில் பயன்படுத்தப்பட்ட பெற்றோல் குண்டு தயாரிப்பதற்கு அவசியமான தகவல்களை கூகுள் தேடு பொறி ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறை சம்பவங்களின் போது சமூக வலைத்தளங்களுக்கு அப்பால் கூகுள் தேடு பொறியில் சிலவற்றைய தேடியுள்ளதாக Google Trends தரவுகள் உறுதி செய்துள்ளன.

கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதியில் இருந்து 8ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் Google Trends தரவுகளை ஆய்வு செய்யும் போது இந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மோதலின் போது பெற்றோல் குண்டுகளுடன் வன்முறையில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட நிலையில் அதனை தயாரிப்பதற்கான உதவிகளை கூகுள் மூலம் தேடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் காணொலிகள் சமூக வலைத் தளங்களில் வேகமாக பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் இடம்பெற்ற வன்முறைக்கு ஆஸி. 'கெயர்லங்கா' அமைப்பு கண்டனம்

அவுஸ்திரேலியாவில் வதியும் சிங்கள- தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களால் உருவாக்கப்பட்ட "கெயர்லங்கா" அமைப்பு அம்பாறையிலும் கண்டிப்பகுதிகளிலும் அண்மையில் இஸ்லாமிய மக்கள் மீது நடந்த வன்முறைச் சம்பவங்களைக் கண்டிக்கிறது.

எதிர்காலத்தில் மீண்டும் இலங்கை வன்முறையில் மூழ்கக்கூடாது. வன்செயல்களை யார் உருவாக்கினாலும் அவர்கள் மீது முறையான விசாரணைகள் மேற்கொண்டு சட்டத்தினால் தண்டிக்கப்படவேண்டும். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிப்பாதுகாக்கவேண்டிய பாதுகாப்புத்துறையினர் அமைதியை நிலைநாட்டவேண்டும். " இவ்வாறு அவுஸ்திரேலியா "கெயார்லங்கா" அமைப்பின் தலைவர் டாக்டர் நடேசன் அமைப்பின் சார்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

அரசாங்கம் வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்ததையும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதையும் கவனத்தில் எடுத்துள்ளோம்.

ஆனால், வன்செயல்கள் நடந்த பின்னர் நடவடிக்கைகளை எடுப்பதைவிட, இவை உருவாகாமல் தடுப்பதிலேயே அரசின் கடமை முக்கியமானது என்பதையும் சுட்டிக் காண்பிக்க விரும்புகின்றோம்.

எதிர்காலத்தில் அரசினது முக்கிய பொறுப்பாக இத்தகைய விடயங்கள் கருதப்படல் வேண்டும் என்பதையும் நினைவூட்டுகின்றோம். மேலும் இந்த வன்முறையின் காரணத்தையும் இதனது சூத்திரதாரிகளையும் கண்டுபிடிக்க தீவிர புலன் விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நிகழ்ந்திருக்கும் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வும் அளிக்கவேண்டும். இப்படியான சம்பவங்கள் இலங்கையில் முன்பு நடந்தபோது பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையாக புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

இந் நடவடிக்கைகளுக்கு மத்தியில் பல்லின மக்களிடம் குறிப்பாக, மதங்களிடையேயும் இனங்களிடையேயும் புரிந்துணர்வை வளர்க்கவேண்டிய கட்டாயமும் உள்ளது.

புரிந்துணர்வை வளர்க்க தேசிய நல்லிணக்க மற்றும் புனர்வாழ்வு நிறுவனங்களூடாகவும், பாடசாலைகள் அரசாங்க அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், மத பீடங்கள், மட்டத்தில் ஆக்க பூர்வமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையில் பொறுப்பான இன மத புரிந்துணர்வை வளர்ப்பதே இலங்கை அரசின் தலையாய கடமை எனவும் நாங்கள் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சைவசமய பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

சைவ சமய பரிசில் நாள் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், தென்மராட்சி ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி பிரதேச செயலக இந்துசமய கலாசார உத்தியோகத்தர் ம.விஜயகுமார், தென்மராட்சி கல்விவலய ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.ல.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# தவக்கால யாத்திரைத் திருவிழா



(யாழ்ப்பாணம்)

குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலய திருத்தல யாத்திரைத் திருவிழா நாளை புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

மறுநாள் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச் செபமாலையும் திருப்பலியும் இடம்பெறும்.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருப்பலியும் நற்கருணை வழிபாடு-பவனி ஆசீர் இடம்பெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் திருவிழா திருப்பலியும் புனிதரின் பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (இ-7)

# இலவச யோகாசனப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் இலவச யோகாசனம், தியானம், மூச்சுப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்ள விரும்புபவர் திருமூலர் யோகா அறச்சாலையில் (பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு) பெயர்களைப் பதிவு செய்து கொள்ளமுடியும். தினமும் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணிவரை பெயர்கள் பதிவு செய்து கொள்ள முடியும்.

இப்பயிற்சிநெறியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் யாவரும் கலந்து கொள்ள முடியும்.

20 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளலாம். நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். மேலதிக தொடர்புகளுக்கு 077 276 5413 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

# சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 111 ஆவது குருபூசைத் தினப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றிய சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 111 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் குருபூசைத் தினப் போட்டியும் எதிர்வரும் சித்திரை மாதம் 7, 8 ஆகிய திகதிகளில் நடைபெற்று 21 ஆம் திகதி பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைமாணவர்கள் பாடசாலை மூலமோ நேரடியாகவோ விண்ணப்பங்களைப் பெற்றுபூர்த்தி செய்து இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் சதா வதானி கதிரைவேற்பிள்ளை வீதி தம்பசிட்டி புலோலி மத்தி பருத்தித்துறை என்ற நிலைய முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சன சமூக நிலையச் செயலாளர் யோ.செந்தூரன் அறிவித்துள்ளார். (இ-7)



யாழ்.கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வின் போது...

# மாணவர் மனநலனை மனநிறைவாக்கும் மகிழ்வான கற்றல் பொறிமுறையை தோற்றுவித்தலே கல்வியின் அடைவை அர்த்தமுடையதாக்கும் உபாயம்

முன்பொரு காலத்தில் தமிழினம் தரணியில் நிமிர்வுகண்டமைக்கு கல்விநிலையில் உயர்வு கண்டமையை காரணமாகக் குறிப்பிடலாம். கல்வியொன்றையே கருந்தனமாகவும் மூலதனமாகவும் கொண்ட தமிழினத்தின் இன்றைய கல்வி நிலைமையானது மிகவும் மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

இதற்கான காரணங்களை ஆராய முற்படுகையில் தனிநபர், குடும்ப, சமூக, சமய, பொருளாதார, கலாசார ரீதியிலான இடையீட்டு அவத்தைகளில் ஏற்பட்டுவரும் எதிர்மறையான மாற்றங்களே என்பதனை அறுதிட்டுக் கொள்ள முடியும். தற்கால தகவல் தொழில் நுட்பப் புரட்சியின் விளைவாக உலகமயமாக்கல் செயன்முறை வேகமெடுத்து வருகின்றதன் பின்னணியில் கல்வித்துறையானது பல்தளப் பரிணாமத்தில் பல்வேறு சவால்களை சந்தித்து வருகின்றமையைக் காண முடிகின்றது.

கல்வியியற் கோட்பாடுகளானவை இனத்துவ அடையாளங்களை பிரதிபலிப்பவையாக இருப்பது அவசியமானதொன்றாகும். இவற்றினை அடிப்படையாக கொண்டு வகுக்கப்படும் கல்விக்கொள்கைகள் நிலைபேறான அபிவிருத்திக்குதவும் மூலங்களாகும். ஆனால் தமிழினத்தை பொறுத்தவரையில் இனப்பிரக்ஞையின்றிய, முரண்பட்டதான கல்விப் பாடவிதானங்கள் கல்வியியலாளர்களால் வடிவமைக்கப்பட்டிருக்கின்றமையானது கல்வித்துறையிலுள்ள பெரும் குறைபாடாகச் சுட்டியுரைக்கத்தக்கது.

தற்காலத்தில் கல்வியின் சிறப்பை மேன்மையுறச் செய்கின்ற சமய, ஒழுக்க விழுமியப்பண்புகளுடனான கற்றல், கற்பித்தல் செயன்முறையானது கானல் நீராகி வருகின்றமைக்கு தமிழினத்தின் பண்பாட்டு விழுமியக்கூறுகளை பிரதிபலிக்காத, இனப்பிரக்ஞையற்ற கல்விமுறையும் ஒரு காரணம் எனக் கூறலாம். சமகாலத்தில், பரீட்சைப் பெறுபேற்றை மட்டும் மையப்படுத்தியதான கல்விமுறை மேலோங்கி வருகின்ற நிலையில், ஆசிரியர், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோருக்கிடையிலான பரஸ்பர இடைத்தொடர்புகளும் விரிசலடைந்து வருகின்றன.

இது பற்றிய விவாதங்கள் இவ்விடத்தில் அவசியமற்றவை. எனினும் மாணவர்களின் உளநிலைகளில் எதிர்வினையாற்றக்கூடியளவிற்கு இவற்றின் காரண- காரியத் தொடர்புகள் அமைந்திருக்கின்றன. இங்கு மாணவர்களின் மனநிறைவான- மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் சூழலைத் தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரிய சமூகத்தை சார்ந்திருக்கிறது.

இதற்கு சீர்மியப் பண்புகளுடனான கற்பித்தல் பொறிமுறையொன்றே மாணவர்களின் மனநலன்களை வளப்படுத்துகின்ற, ஆற்றுப்படுத்துகின்ற பொறிமுறை என்ற வகையால் இது பற்றியதான விடயங்களை சற்று விரிவுற நோக்கலாம்.

தற்காலத்தில் ஆசிரியப் பணியானது மிகவும் சவால் நிறைந்ததாகத் திகழ்கிறது. ஆசிரியத்துவத்தின் அடிப்படைப் பண்பியல் சிதைவடைந்து வியாபார மாயைக்குள் அமிழ்ந்திருக்கின்ற இன்றைய நிலையில் ஆசிரியர்களின் உளவள வாண்மை நிலையானது கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆசிரியர் வாண்மை விருத்தியில் சீர்மியப் பண்புகளுடன் கூடிய கற்பித்தல் செயன்முறை, பெரிதும் முக்கியத்துவமுடையது. இது மாணவர்களின் உளத்தேர்ச்சிநிலையை உயர்த்தும் தன்மைவாய்ந்தது.

மாணவர்களின் உளவுரண், உளத்தாங்குதிறன் சிதைவடைகையில் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்கள், தவறிழைக்கும் நிலைமைகள் அதிகமாக காணப்படுகின்றன. ஒரு வகுப்பறையை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு மாணவனுடைய மனவியல் சார் பண்புகளும் வெவ்வேறானவை. தனித்துவமானவை. அவற்றை அவனது சிந்தனை, நடத்தை, அறிகை ஆகியவற்றின் வெளிப்பாடுகள் மூலம் சரியாக இனங்கண்டு செயற்படக்கூடியதான நுழைபுலம் ஆசிரியர்களுக்கிருக்க வேண்டியதும், இதற்குத் தேவையான அடிப்படை உளவளத்துணை அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

தற்போது மாணவ சமூகத்தில் ஆழமாக புரையோடிக் காணப்படுகின்ற மது, போதைப்பொருட் பாவனைகள் அதன் தொடர்ச்சியாக அரங்கேறிவருகின்ற சமூக விரோத செயற்பாடுகள் அனைத்திற்குமே அவர்களது மனவியல்சார் பாதிப்பின் பிரதிபலிப்பேயன்றி வேறு வலுவான முகாந்திரம் இல்லையெனலாம். வன்முறைச் செயற்பாடுகள் பெரும்பாலும் பாடசாலைக் களத்திலிருந்தே ஊற்றெடுக்கின்றமையை காணமுடிகிறது.

இத்தகையவாறான செயற்பாடுகளில் கூடுதலாக பாடசாலை பதின்ம வயதுப்பிரிவினரே ஈடுபடுகின்றமையும் கண்கூடு. எனவே வன்முறைசார்ந்த எதிர்மறை எண்ணங்களை மாணவர்கள் மனங்களிலிருந்து துடைத்தெறிய வேண்டுமாகில் ஆசிரியர்களின் அன்பான அரவணைப்புடன் கூடிய கற்பித்தல் முறையினால் மட்டுமே சாத்தியப்படும்.

“இன்றைய இளையவர்கள் நாளைய தலைவர்கள்” என்ற முதுமொழியை மெய்ப்பட வைக்கின்ற பெரும்பணி, ஆசிரிய சமூகத்தையே சார்ந்திருக்கின்றது. தனியே ஏட்டுக்கல்விமுறை மாத்திரம் அதாவது பரீட்சைப் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட, திணிப்பு முறையிலான கற்பித்தல் முறை, மாணவர் முன்னேற்றத்தின்



அடைவை, தேர்ச்சியை நிர்ணயம் செய்யமாட்டா. மாறாக ஒவ்வொரு மாணவனினதும் மனக் குறைகளையும் உளப் பிரச்சினைகளையும் ஆழ்ந்தறிந்து, ஆளுமைவிருத்தியை பரிபாலனம் செய்யக்கூடியவாறான கற்பித்தல் செயன்முறையினை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கிருக்கிறது.

அத்துடன் ஒரு மாணவனின் எதிர்கால வாழ்க்கையானது ஆசிரியரின் கைகளிலே தங்கியிருக்கிறது என்பதனால் அவனிடம் இலைமறை, காயாக மறைந்திருக்கின்ற பல தரப்பட்ட படைப்புத் திறன்களை இனங்கண்டு வெளிக்கொணரக் கூடியளவிற்கு உளவியலறிவை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மேலும், வாழியற் சூழலே ஒரு மாணவனின் எதிர்கால வாழ்வியலை நிர்ணயம் செய்கின்றது. எனவே வளமான கற்றல் சூழலை தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பும் ஆசிரியர்களுக்கிருக்கிறது. மனிதனின் உளவிருத்திப் படிமுறையில் மாணவப்பராயமானது காத்திரமானது. இயல்பாகவே, விரைவில் உணர்ச்சிவசப்படக்கூடிய உணர்வுக் கொந்தளிப்புகளுக்கு ஆட்படும், எந்த விடயத்தையுமே தர்க்கரீதியில் அணுகும் ஆராயும் பருவம். வரும் நன்மை தீமைகளை பிரித்தறியும் பாங்கு குறைவாயினும் துடுக்குத்தனமும் எதையும் விரைவாக செய்து முடிக்க வேண்டும், பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் மனங்களில் சுழன்றடிக்கும் பிராயம்.

இதன்காரணமாக, உளவியல் ரீதியான பாதிப்புக்களையும் இப்பிராயத்தினர் இலகுவாக சந்திக்க நேரிடுகின்றன. இப்பாதிப்புகளை உரியவாறு இனங்கண்டு நிவர்த்திக்கக் கூடியதான அடிப்படை சீர்மிய அறிவை வளர்த்துக்கொள்ள ஆசிரிய சமூகம் முயற்சிக்க வேண்டியதும் இதற்கான துறைசார்வாண்மை விருத்தி செயலமர்வுகளை தகைசான்ற வளவாளர்களைக் கொண்டு ஒழுங்கு செய்து நடத்துவதற்கான எத்தனங்களை கல்விச்சமூகம் விரைந்து எடுக்க வேண்டியதும் காலத்தின் தேவையுமாகும்.

பொதுவாக மாணவப் பராயத்தினர் சந்திக்கின்ற உளப்பிரச்சினைகள் சிலவற்றை நோக்கின், படிப்பில், விளையாட்டில், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஆர்வம் குன்றுதல், ஞாபக மறதி, தனிமையினை விரும்புதல், கற்றலில் இடர்பாடுகள், ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்களிடமுள்ள தொடர்பாடற்றிறனில் விரிசல்கள் காணப்படல், வன்முறை மனப்பாங்கு, சமூக விரோத செயற்பாடுகளில் ஆர்வம், பழிவாங்கும் உணர்வு அதிகரித்தல், குணவியல்புகளில் திடீர் மாறுதல்கள் தென்படல், அதீத பயம், சிடுசிடுப்பு, துக்கம், அதீத உசார் நிலை, மெய்ப்பாட்டு ரீதியிலான முறைப்பாடுகள் வெளிப்படுத்தல் முதலிய பல இயல்புக்கு மாறான அறிகுறிகள் அல்லது நடத்தைகள் ஒன்றோ அல்லது பலவோ பாதிக்கப்பட்டவர்களிலிருந்து வெளிக்கிளம்பலாம்.

மாணவர்களின் மனநிலையை நன்கறிந்து கற்பிக்கும் ஆசிரியரே ஆசிரியத்தின் இலக்கணமாக விளங்குகிறார். அதாவது கற்பித்தல் நடவடிக்கையின்போது காலம்,இடம், ஏவல் அறிந்து கற்பிக்கும் விடயதானம் பற்றிய தெளிவுடன் நிதானமாகவும் அமைதியாகவும் இன்முகத்துடன் மாணவர்கள் ஏற்கும் வகையுணர்ந்து மனதில் பதியும்படி, மாறுபாடில்லா மனநிலையுடன் கற்பிக்க வேண்டும் என ஆசிரியத்தின் இலக்கணம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கல்வித்துறையில் தற்போது தேவைப்படும் மாற்றம், மாணவர்களின் உளவிருத்திச் செயற்பாடுகளை இனங்கண்டு, ஊக்குவித்து அவர்களது ஆளுமையை விருத்திசெய்துகொள்ளும் முகமான கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

மாணவர்கள், பாடசாலைகளுக்கு பல்வேறுபட்ட மனநிலைகளுடன் வருகின்றனர். கற்றல் செயற்பாட்டின் போது எல்லோராலும் எல்லாவற்றையும் எப்போதும் புரிந்துகொள்ள முடியாது. மாணவர்களின் கிரகித்தல் நிலைக்கும் அறிவுக்கும் ஏற்பவே அவர்களால் புரிந்துகொள்ள இயலும்.

எனவே ஓர் ஆசிரியர் தனது இயலுமை அறிவைக் கொண்டு எல்லா மாணவர்களும் ஒரே தரத்தினராக கருதி பாட அறிவைத் திணித்து விடமுற்படல் அபத்தம். பாத்திரங்களின் அளவுமுறைக்கேற்பவே நீரை ஊற்றல் வேண்டும் என்ற கருத்தியல் இவ்விடத்தில் பொருத்துடையதாகும்.

இறுதியாக, கற்றலும் கற்பித்தலும் பல்வேறு நோக்கங்களை உள்ளடக்கிய நிகழ்வாகும். ஒவ்வொரு மாணவனுக்கும் இயல்பாகவே கற்றுக்கொள்ளும் திறன் உள்ளது. ஆசிரியரின் பணியானது அவற்றை நெறிப்படுத்துவதாகும். அதாவது கற்றலுக்கேற்றவாறான சூழலை உருவாக்குதலும் கற்றலின் நோக்கங்களை புரியவைத்தலும் மாணவர்களுக்கு அறிவுசார், புலமைசார், உணர்வுசார் கல்விக் கூறுகளை சமமாக வழங்குதலும் மாணவர்களின் மீது ஆதிக்கத்தை பிரயோகிக்காமல் அவர்களது எண்ணங்களை பகிர்ந்து- புரிந்து கொள்ளலும் சேவை மனப்பாங்கும் முக்கியமானவையாக விளங்குகின்றன. முன்னரெல்லாம் ஆசிரியப் பணிக்கு அறிவு, ஆளுமை, உயர்ந்த பண்புகளுடையவர்களையே தேர்ந்தெடுத்தார்கள்.

ஆனால் அந்நிலைமை இன்று மலையேறிவிட்டது. இன்றைய கல்விமுறையானது, அரச வேலையொன்று கிடைக்க வேண்டும், பிழைக்க வழிதேட வேண்டும் என்கின்ற பணத்தை மையமாகக் கொண்ட சிறுமைத்தனமான நிலையிலிருப்பதனால் கற்றறிவுடையோர்க்கு அன்றிருந்த மதிப்பும் மரியாதையும் இன்று இல்லாமற்போயிற்று. ஆசிரிய- மாணவர் உறவுநிலையும் சீர்கெட்டுள்ளது. இவர்கள் மீது மாணவர்கள் நலன்களில் அதிகம் அக்கறைப்படுவதில்லை,

அன்பு செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுவது தவிர்க்க முடியாது. பாடத்துடன் விழுமியப் பண்புகளையும் போதிக்கத் தவறிவிடுகின்றனர். எது எவ்வாறாயினும், தற்கால தகவல் தொழில்நுட்ப யுகத்தில் கற்றல் செயற்பாடுகள் இலகுவாக்கப்பட்டிருக்கின்றமையால் ஆசிரியர்களின் பணிச்சுமை குறைக்கப்பட்டிருக்கின்றது.

இருந்தும், மாணவர்கள் எதிர்நோக்கி வருகின்ற கற்றல் இடர்ப்பாடுகளுக்கான முதன்மை மூலமாக விளங்கும் உளப்பாதிப்புகளுக்கு சீர்மிய ஆதரவினை வழங்குவதற்கான ஆதரவளித்தல், மாணவர்களுடன் அந்நியோன்ய உறவுநிலையை வளர்த்தல், உடனிருத்தல், ஒத்துணர்வு வழங்கல், அக்கறையான செவிமடுத்தல், வெளிப்படுத்தல், பிரச்சினைகளை தீர்த்தல் போன்ற வகையில் சீர்மியச் செயற்பாட்டினை மாணவர்கள் நலன் சார்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ப தமது தகுதிநிலையை நிலைநிறுத்திக்கொள்வதற்கும் மகிழ்வான கற்றல் சூழமைவை தோற்றுவிக்கவும் முன்வர வேண்டும்.

இது எதிர்காலத்தில் கற்றல் செயற்பாட்டின் தடைகளை தகர்த்து, நிலைபேறான அபிவிருத்திக்கு மனித வளங்களை ஒழுங்குபடுத்தி, கூர்தீட்டுவதற்கானதொரு பரீட்சைக்களமாகவும் அமைகின்றது.

ஆக்கம்: ஸ்ரீ.நதிபரன்

# பாரதம்

# அனுபவம் இல்லாத மலைப் பய

# காட்டுத்தீயில் சிக்கி 9 பேர்

## தேனியில் சோகம்



(தேனி)

ஐடி நிறுவனத்தில் பணியாற்றும் 36 பேர் கடந்த சனிக்கிழமை தேனி குரங்கணிப் மலைப்பகுதிக்கு சுற்றுலா சென்ற வேளை மலையில் ஏற்பட்ட திடீர் காட்டுத்தீயில் சிக்கி 9 பேர் பலியான சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனி மாவட்டம், போடி அருகே குரங்கணி வனப்பகுதியில் சுமார் 2 ஆயிரம் அடி உயரம் கொண்ட டாப்ஸ்டேசன் மலைப்பகுதி உள்ளது. குரங்கணியில் இருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் வனப்பகுதி அமைந்துள்ளது. சுற்றுலாவுக்காக இங்கு அதிகம் பேர் வந்து செல்கின்றனர்.

இந்த நிலையில் குரங்கணி வனப்பகுதியில் நேற்று முன்தினம் பிடித்த தீயில்



சுற்றுலா சென்ற 39 பேர் சிக்கிக்கொண்டனர். வனப்பகுதியில் சிக்கியவர்களை மீட்க போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. ஆண், பெண் மற்றும் குழந்தைகள் உட்பட 27 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த காட்டுத்தீயில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர். மலையேற சென்றவர்கள் காட்டுத்தீயில் சிக்கி கொண்டனர் என தேனி ஆட்சியர் பல்லவி பல்தேவ் தெரிவித்துள்ளார். இதுவரை மீட்கப்பட்ட 27 பேரில் 10 பேருக்கு எந்தக் காயமும் இல்லை. பலியானவர்களில் 6 பேர் பெண்கள்.

காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்த 9 பேரில் 6 பேர் சென்னையை சேர்ந்தவர்கள் என்றும் மற்றும் 3 பேர் ஈரோட்டை சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர்கள் முன் அனுபவம் இன்றி மலைப் பயணம் சென்று திடீரென ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்கி காட்டைவிட்டு வெளியேற திசை அறியாது உடல் கருகி உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. உயிரிழந்தவர்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் அரசியல் பிரமுகர்கள் இரங்கல் வெளியிட்டுள்ளனர். (10)



## மலைப்பகுதி நொருங்கிய விப பதினொரு பேர் உயி

(தெஹ்ரான்)


ஐக்கிய அரபு எமிரேட்சில் இருந்து துருக்கி சென்ற விமானம் ஈரான் மலைப்பகுதியில் கீழே விழுந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த 11 பேரும் பலியாகினர்.

துருக்கி நாட்டை சேர்ந்த தனியார் விமானம் ஐக்கிய அரபு எமிரேட்சில் இருந்து இஸ்தான் புல் நோக்கி சென்றது.

அதில் 11 பேர் பயணம் செய்து கொண்டிருந்தனர். அந்த விமானம் ஈரான் நாட்டு மலைப்பகுதியில் சென்ற போது கீழே விழுந்து நொருங்கியது.

இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 11 பேரும் பலியாகினர் எனவும், ஈரான் மலைப்பகுதியில் பலத்த காற்று மற்றும் மழை பெய்து வருவதால் இந்த விபத்து நடந்திருக்கலாம் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குண்டுடன் பயணித்த விமா சுடுமாறு உத்தரவிட்டே



(மொஸ்கோ)

கடந்த 2014ஆம் ஆண்டு குண்டொன்றுடன் பயணிகள் விமானமொன்று பயணிப்பதாகத் தகவல் கிடைத்த நிலையில், அவ்விமானத்தைச் சுட்டு வீழ்த்துமாறு தான் உத்தரவிட்டிருந்ததாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் இம்மாதம் 18ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணப்பட விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தபோது,

“கடந்த 2014ஆம் ஆண்டு, உக்ரைனிலிருந்து துருக்கி நோக்கிப் பயணித்த விமானமொன்று கடத்தப்பட்டதாகவும், அவ்விமானத்தின்

## சசிகலாவிற்கு சிறையில் சலுகை மீண்டும் எழுந்தது புதிய சர்ச்சை



(பெங்களூர்)

சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று சிறை வைக்கப்பட்டுள்ள சசிகலாவுக்கு சிறையில் விசேட சலுகைகள் வழங்கப்பட்டு வருவதாக மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளது.

சசிகலா சிறை வைக்கப்பட்டுள்ள பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்கு கடந்த சனிக்கிழமை தேசிய மகளிர் ஆணைய தலைவி சென்று ஆய்வு நடத்தியுள்ளார். இதன்போது, சசிகலா சிறை உடையை தவிர்த்து சாதாரண உடையில் இருந்தமை மற்றும் அவரது அறையில் வேறு பல உடைகளும் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சசிகலாவிடம் விசாரணை நடத்திய மகளிர் ஆணைய தலைவி, சிறை அதிகாரிகளையும் கண்டித்துள்ளார்.

இதேவேளை, சசிகலாவிடம் இலஞ்சம் பெற்று அவருக்கு சொகுசு வாழ்க்கை ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (10)

## எனது மகனை விடுவியுங்கள் அற்புதம்மாள் கோரிக்கை



(கடலூர்)

ராஜீவ் காந்தி கொலையாளிகளை மன்னித்து விடுவதாக காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ள கருத்துக்கு அற்புதம்மாள் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனின் தாய் அற்புதம்மாள், சிதம்பரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதைத் தெரிவித்தார்.

“எனது மகனின் தீர்ப்பை எதிர்பார்த்திருக்கும் இந்த நேரத்தில் ராகுல் காந்தி கூறிய இந்த கருத்துக்கு அனைத்து தலைவர்களும் வரவேற்பு அளித்திருக்கிறார்கள்.

முதல்வரும் எனது மகன் விடுதலை குறித்து சட்டத்துக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

எனவே மாநில அரசு விரைந்து மத்திய அரசுடன் பேசி எனது மகன் விடுதலை குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (10)

# வெளிநாடு

...யணம்

...ர் பலி



...ந்தியில்

...விமானம்

...உயிரிழப்பு

...து ...ம் ...ற ...து. ...ில் ...ர் ...ில் ...து ...க் ...ம்

ஈரான் மலைப்பகுதியில் கீழே விழுந்து விமானம் தீப்பிடித்து எரி வதை கண்ட அப்பகுதி மக்கள் உட னடியாக உள்ளூர் பொலிஸுக்கு தக வல் அளித்தனர். அங்கு சென்ற படை யினருடன் சிதறி கிடந்த 11 பேரின் உடல்களை மீட்டனர் என அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

கடந்தமாதம்ஈரானில்நடந்த விமான விபத்தில் 66 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ...விமானத்தையே ...ட்டேன் - புடின்


மூலம் சொச்சி நகரில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்போட்டியை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்ததாகவும், அவ் விமானம் குண்டொன்றுடன் பய ணிப்பதாகவும், எமக்குத் தகவல் கிடைத்தது.

இவ்வாறான சூழ்நிலையில், அவ் விமானத்தைச் சுட்டு வீழ்த்த நான் உத்தரவிட்டேன். இருப்பினும் சில நிமிடங்களின் பின்னர், அத்தகவல் பொய்யானதென்று தெரியவந்த நிலையில், அவ்விமானம் சுட்டு வீழ்த்தப்படவில்லை" என அவர் தெரிவித்தார்.

உக்ரைனிலிருந்து துருக்கிக்கு 110 பயணிகளுடன் பயணித்த போயிங் 737-800 இலக்கமுடைய விமானத் தில் பயணியொருவர் குண்டை வைத் திருந்ததாகவும், சொச்சிக்கு விமானம் திசைதிருப்பப்பட்டதாகவும் ஊடகவிய லாளரொருவர் இந்நிகழ்வில் கேட்டி ருந்தார். இதற்குப் பதிலளித்த போதே, ஜனாதிபதி புடின் மேற்கண்டவாறு தெரிவித்தார். (10)

# அணு ஆயுதத்தால் உலகை அச்சுறுத்தும் கிம் ஜாங்-ட்ரம்ப் பேச்சு ஆபத்தில் முடியும்

## ஹிலாரி எச்சரிக்கை



(ஆம்ஸ்டர்டாம்)

அணு ஆயுதங்களை வைத்து மிரட்டிவரும் வட கொரியாவுடன் சமாதானம் பேச நினைக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முயற்சி ஆபத்தில் முடியும் என ஹிலாரி கிளிண்டன் எச்சரி த்துள்ளார்.

அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகளை வைத்து அமெரிக்கா உள்ளிட்ட வல்ல ரசு நாடுகளை மிரட்டிவரும் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன் அமர்ந்து சமாதானம் பேசுவதற்கு தயாராக இருப்பதாக சமீப த்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தி ருந்தார்.

பேச்சுக்கு முன்னதாக அணு ஆயுதங்களை பயன் படுத்தமாட்டோம் என வட கொரியா வாக்குறுதி அளிக்க வேண்டும் என்றும் அவர் நிபந்தனை விதித்திருந்தார்.

இது தொடர்பாக, கருத்து தெரிவித்துள்ள அமெரிக்கா வின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகை, ட்ரம்ப்பின் முடி வால் வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் முடிவு க்கு வந்த பின்னர், ட்ரம்பும் வடகொரிய ஜனாதிபதியும் இணைந்து புகைப்படங்க ளுக்கு போஸ் கொடுத்தல் அது நேச நாடுகளுடனான அமெரிக்காவின் உறவில் முறிவை ஏற்படுத்துவதுடன், பேரழிவாகவும் அமைந்து விடும் என குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், 'வட கொரியாவுடன் சமாதானம் ஏற்படுத்துவது தொடர்பான உடன்படிக்கை தயாரிக்கும் பணி வெள்ளை மாளிகை யில் நடந்து வருவதாகவும், இது பூர்த்தி அடைந்தால் இந்த உலகத்துக்கு மிகவும் நன்மையாக அமையும். இந்த உடன்படிக்கையில் இருவரும் கையொப்பமிடும் நேரத்தையும், இடத்தையும் தான் இனி முடிவு செய்ய வேண்டும்' என தனது டுவி ட்டர் பக்கத்தில் ட்ரம்ப் தெரி வித்திருந்தார்.

டுவிட்டர் பக்கத்தில் மீண்டும் ஒரு பதிவை வெளி யிட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், கடந்த 28-11-2017 அன்றி லிருந்து வடகொரியா ஏவு கணை பரிசோதனை எதை யும் செய்யவில்லை.

ஏவுகணை சோதனை களை நடத்தப் போவதில்லை என சமாதானம் பேசிவரும் அமெரிக்க அதிகாரிகளிடம் வடகொரியா வாக்குறுதி அளித்துள்ளது.

அந்த வாக்குறுதியை காப்பாற்றுவார்கள் என நான் நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அணு ஆயுதங்களை வைத்து மிர ட்டிவரும் வடகொரியாவு டன் சமாதானம் பேச நினை க்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் முயற்சி ஆபத்தில் முடியும் என அவரை எதிர் த்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டவரும், அமெரி க்க அரசின் முன்னாள் வெளி யுறவுத்துறை அமைச்சரு மான ஹிலாரி கிளிண்டன் எச்சரித்துள்ளார்.

வடகொரியாவுடன் சமா தானம் பேச நினைக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் பின் போக்கு தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த ஹிலாரி, அமெரிக்க வெளி யுறவுத்துறை அமைச்சகத் தில் அனுபவம் வாய்ந்த பல உயரதிகாரிகள் ஒவ்வொரு வராக வெளியேற்றப்பட்டு வருவதை சுட்டிக்காட்டி னார்.

இராஜதந்திர அணுகு முறைகளை அறிந்த மூத்த அதிகாரிகள் யாரும் இல்லா மல் இராஜதந்திர முறையின் மூலம் வடகொரியாவுடன் சமாதானம் காண நினைக் கும் டொனால்ட் ட்ரம்பின் நடவடிக்கை ஆபத்தில் முடி யும்.

அணு ஆயுதங்கள் தொட ர்பாக வடகொரியா ஜனாதி பதி கிம் ஜாங் உன்னுடன் பேச வேண்டுமானால் அத ற்கு நன்றாக விபரம் தெரி ந்த, இராஜதந்திர முறைகளை நன்கறிந்த மூத்த அதிகா ரிகள் மிகவும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். உலக நாடுகள் பலவும் எப் போது என எதிர்பார்த்து நிற் கும் அமெ.-வடகொரியா பேச்சு வார்த்தையில் கூறியவரின் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (10)

# பாக்.முன்னாள் பிரதமர் மீது காலணி வீச்சு

(லாகூர்)

பாகிஸ்தான் மதரஸா வில்நவாஸ்ஷெரீப்மீது காலணி வீசப்பட்டதால்பரபரப்பு ஏற்பட்டது.

பாகிஸ்தானில் ஆளும் கட்சியை சேர்ந்த தலைவர் கள் மீது சமீப காலமாக தாக்குதல் நடத்தப்படுவது வழக்கமான ஒன்றாக இருந்து வருகிறது.

லாகூரில் முப்தி முகமது உசேன் நயீமி மத குருவின் நினைவு நாள் நிகழ்ச்சியில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் கலந்து கொண்ட



போது அங்கு அவர் மேடை யில் ஏறியபோது, அவரை நோக்கி பார்வையாளர்களில் ஒருவர் காலணியை வீசி யுள்ளார். இதனால் நயீம் கடும் அதிர்ச்சி அடைந்தார். காலணி வீசிய நபரை அங் கிருந்தவர்கள் மடக்கிப்பிடித்த னர். அவரை பொலிஸாரி டம் ஒப்படைத்தனர்.

நிகழ்ச்சியில் திட்டமிட் டபடி, நவாஸ் ஷெரீப் பேசி னார். அவர் தனது பேச்சை சுருக்கிக்கொண்டார்.

நவாஸ் ஷெரீப் மீதும் காலணி வீசப்பட்டிருப்பது பாகிஸ்தானில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவத்துக்கு, பாகிஸ் தான் அரசியல் கட்சி கள் கண்டனம் தெரிவித்து உள் ளன. மதரஸாவில் நவாஸ் ஷெரீப் மீது காலணி வீசிய நபர் முன்னாள் மாணவர் என தெரிவிக்கப்பட்டு உள் ளது.

இச்சம்பவம் தொடர்பாக நவாஸ் ஷெரீப் நீண்ட நேரம் பேசுவதை தவிர்த்து உடன டியாக பேச்சை முடித்துள் ளார். அண்மையில் பாக் வெளியுறவுத்துறை அமைச் சர் மீது மைவீசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (10)

# மின்னல் வேகத்தில் இலக்கை அடைந்த கின்ஷால் ஏவுகணை சோதனை வெற்றி



(மொஸ்கோ)

ஒலியை விட 10 மடங்கு தாக்கும் திறன் கொண்ட ஏவுகணை சோதனையை ரஷ்யா வெற்றி கரமாக நடத்தி உள்ளது.

ரஷ்யா 'கின்ஷால்' எனப் படும்அதிவேக ஏவுகணையை தயாரித்துள்ளது. இது ஒலியை விட 10 மடங்கு வேகமாக பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்தது.

இந்த ஏவுகணையை ரஷ்யா நேற்று முன்தினம் பரிசோதித்தது. 'மிக்-31 சுப்பர் சோனிக் தடுப்பு ஜெட்விமானத் தில் இருந்து ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது.

முடிவில் இந்த சோதனை வெற்றி பெற்றதாக அறி விக்கப்பட்டது. இது ரஷ்யா வின் தெற்கு ராணுவத்தில் இணைக்கப்படும் என அறி விக்கப்பட்டுள்ளது. ரஷ்யா வில் மார்ச் 18ஆம் திகதி நடை பெறும் ஜனாதிபதித் தேர்த லில் தற்போதைய ஜனாதிபதி புடின் போட்டியிடுகிறார்.

தேர்தலில் அவர் வெற்றி பெறும் நிலையில் கடந்த வாரம் 'கின்ஷால்" ஏவு கணை குறித்த அறிவிப்பை வெளியிட்டு அதிநவீன முழு திறன் படைத்த ஆயுதம் என புடின் வர்ணித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# 110 அடி ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் 35 மணி நேரத்திற்கு பிறகு பத்திரமாக மீட்பு

(போபால்)

மத்தியப்பிரதேசத்தில் 110 அடி ஆழ ஆழ்துளை கிண ற்றில் விழுந்த 4 வயது சிறு வன் 35 மணி நேரத்திற்கு பிறகு உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளான் என அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்தியப்பிரதேசத்தின் திவாஸ் நகரில் உமரியா கிராமத்தில் ஒரு பெற்றோர் கடந்த சனிக்கிழமை வயல் வெளியின் அருகே விளை யாடிக்கொண்டு இருந்த சிறு வன் வயலில் இருந்த ஆழ் துளை கிணற்றுக்குள் தவறி விழுந்தான்.

இதனைக்கண்ட பெற்றோர் உடனடியாக இதுகுறித்து உள்ளூர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். தகவ லறிந்து மீட்புக் குழுவினர் அங்கு விரைந்து வந்து முதற் கட்டமாக 40 அடி ஆழத்தில் சிக்கியிருந்த சிறுவனுக்கு சுவாசிக்க ஏற்ற வகையில் பிராண வாயுவை செலுத்தி னர். தொடர்ந்து சிறுவனை மீட்கும் பணிகளை அதிகாரிகள் மேற்கொண்டனர்.

சிறுவன் விழுந்த குழிக்கு அருகே மற்றொரு குழி தோண்டப்பட்டு மீட்பு பணி நடைபெற்றது. மத்தியப்பிர தேசத்தில் 110 அடி ஆழ ஆழ் துளை கிணற்றில் விழுந்த 4 வயது சிறுவன் உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளான் என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

ஆழ்துளை கிணற்றில் விழுந்த சிறுவன் 35 மணி நேரத்திறகு பிறகு உயிருடன் பத்திரமாக மீட்கப்பட்டு அப்ப குதியில் உள்ள வைத்தியசா லையில் சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது என வைத்தி யர்கள் தெரிவித்துள்ளனர். (10)

# கண்டிக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறையிடுங்கள்

## பொதுமக்களிடம் கோரிக்கை


(கொழும்பு)

கண்டியில் ஏற்பட்ட கலவரத்தில் சேதமடைந்த சொத்துக்கள் தொடர்பாக பொலிஸில் இதுவரை முறைப்பாடு செய்யாதவர்கள் அது தொடர்பில் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிடுமாறு பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

அண்மையில் கண்டியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்கள், தேமடைந்த தமது உடைமைகள் தொடர்பில் பொலிஸில் முறையிடுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் நேற்று முன்தினம் இரவு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி முதல் அப்பகுதியிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில் இன்று மறுபடியும் பாடசாலைகள் ஆரம்பிக்கவுள்ளன.



இந்நிலையில் கண்டியின் சில பகுதிகளில் நிலவிய வன்முறைகள் அனைத்தும் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் அப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆனமடுவில் தீக்கிரையாக்கப்பட்ட உணவகம் 18 மணித்தியாலங்களில் மீளக் கட்டமைப்பு






(கொழும்பு)

புத்தளம், ஆனமடு நகரில் தீவைக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட முஸ்லிம் உணவகம், சிங்கள வர்த்தக அமைப்பினர், பிரதேச மக்கள் மற்றும் பிரதேச விகாராதிபதி ஆகியோரின் தலைமையில் மீளக் கட்டமைக்கப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

18 மணித்தியாலங்களில் மீளக் கட்டமைக்கப்பட்ட குறித்த உணவகத்தில் வழமை போல மீண்டும் வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பிலும் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை ஆனமடுவில் உள்ள மதீனா முஸ்லிம் உணவகத்திற்கு இனந்தெரியாதோரால் தீவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# உணவகத்திற்கு தீ வைத்த 7 பேர் கைது

(ஆனமடுவ)

ஆனமடுவ நகரிலுள்ள உணவகம் ஒன்றின் மீது பெற்றோல் குண்டை வீசிய சம்பவம் தொடர்பில் 7 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதலால் குறித்த உணவகம் தீயால் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த உணவகம் அருகிலிருந்த வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.டி.வி. கமராவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 19 தொடக்கம் 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# பாதாள உலகக்குழுத் தலைவன் மாதூஷின் உதவியாளர்கள் இருவர் துப்பாக்கியுடன் கைது

(கொழும்பு)

மதூஷ் லக்ஷித எனும் மாகந்துரே மாதூஷின் இரண்டு உதவியாளர்கள் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சமயங் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரே மாதூஷ்.

இவரின் இரு உதவியாளர்களே மாத்தறை, வெலிகம - மிதிகமை பிரதேசத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து துப்பாக்கிகளும் போதைப் பொருட்களும் கைப்பற்றப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மதூஷ் லக்ஷித எனும் மாகந்துரே மாதூஷ் என அறியப்படும் பாதாள குழுத் தலைவர் தற்போது வெளிநாடொன்றில் தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆட்டோ கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

ஆட்டோக்களுக்கான பயணக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆட்டோ வண்டிகளுக்கான உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்துள்ளமையால், பொதுமக்களுக்கான பயணக் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக, இலங்கை சுயதொழில் ஆட்டோ ஓட்டுநர்களின் தேசிய சங்கத்தின் தலைவர் சுனில் ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆட்டோத் தொழிலைப் பாதுகாத்துத் தருமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் மீண்டுமொருமுறை வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### வருகிற ஆத்திரத்திற்கு...

பலபேர் இதை அடிக்கடி சொல்கிறார்கள். அதன் அடுத்த வாக்கியத்தைக் கவனித்தால் இவர்களின் தவறு இவர்களுக்குப் புரிய ஆரம்பித்துவிடும்.

"எனக்கு வருகிற ஆத்திரத்திற்கு என்ன செய்வேன்னு தெரியாது" என்பதுதான் சற்று ஏறக்குறையப் பெரும்பாலானவர்கள் பயன்படுத்தும் வாக்கியம்.

கரெக்ட்! ஆத்திரம் வந்தால் எப்போதும் இதுதான் நடக்கிறது. என்ன செய்கிறோம் என்றே அவர்களுக்குத் தெரிவதில்லை.

தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் அந்தச் செயல் நல்லதா, கெட்டதா? என்று தெரிந்து கொள்ளாமலேயே இறங்குகிறார்கள். ஒருவர் தீர்க்கமாகச் சிந்தித்துப் பல முறை அந்தச் செயலின் பின் விளைவுகளை யோசித்து, பிறகு எடுக்கும் முடிவிலேயே பல கோளாறுகள் வருகிறபோது, சிந்திக்காத போது எடுக்கப்படுகின்ற முடிவு எப்படி இருக்கும்!

ஆத்திரம் வருகிறபோது புத்தி வேலை செய்வதில்லை. அதாவது, உணர்ச்சி மிகுதியாகும் போது அறிவு அறிவு மங்கிப் போகிறது. ஒரே ஒரு உணர்ச்சிதான் தலைதூக்கி நிற்கிறது. அறிவு என்பது பல பிரிவுகளைக் கொண்டது. உணர்ச்சி என்பது அதன் கூறு. ஒன்றுமட்டும் வேலை செய்கிறபோது, மற்ற உணர்வுகள் பின்தங்கி விடுகின்றன. இந்த நேரத்தில் எடுக்கப்படும் முடிவு சற்றும் நல்லதல்ல.

ஆத்திரம் வருகிறபோது பிள்ளைகள் என்றாலும் அடித்து விடுகிறோம். கணவன் -மனைவி என்றால் கடுமையாகப் பேசி விடுகிறோம். நண்பர்கள்- உறவினர்கள்- உடன் பணிபுரிபவர்கள்- வாடிக்கையாளார்கள் என்றால் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி விடுகிறோம். அப்புறம் வருந்துகின்றோம். ஏகமாக வருந்துகின்றோம். கொஞ்சநேரம் கழித்து அல்லது கொஞ்ச நாள் கழித்து உள்ளுக்குள்ளேயிருந்து ஆணித்தரமாக ஒரு குரல் வருகிறது. "என்ன இருந்தாலும் நீ அப்படிச் செய்திருக்கக் கூடாது என்று".

இன்னும் சிலபேர் இருக்கிறார்கள். அவர்கள் ஆத்திரத்தில் ஏதாவது பேசிவிட்டு அவர்களைப் புண்படுத்திவிட்டோமே என்று பின்னால் வருந்திக் கொண்டிருப்பார்கள். சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை அடித்துவிட்டு, பிறகு இவர்கள் அழுதிருக்கிறார்கள்.

மற்றவர்களைப் பேசிவிட்டோம் என்கிற குற்ற உணர்வு நம்மைக் கொல்ல ஆம்பித்ததும் அன்றையபொழுது வீண். இந்தப் பாழும் மனம் இருக்கிறதே, அது நடந்த சம்பவத்தைத் திரும்பத் திரும்ப மனக் கண்ணின் முன்பு கொண்டு வந்து Flash Back போடுகிறது. வேறு வேலை ஓடுமா? ஒருசில நிமிடம் அறிவைப் பயன்படுத்தத் தவறியதற்காக எத்தனை மணிநேரம் இந்தத் தண்டனை!

நம்முடைய ஆத்திரம் நமக்குக் கொஞ்சமாவது நன்மையைச் செய்திருக்கிறதா?

ஆத்திரம் எனும் கையுறையை மாட்டிக் கொண்டு எதிராளியுடன் குஸ்தியில் இறங்கினால் எதிராளி எப்பேர்ப்பட்ட பலவீனமாக இருந்தாலும் சரி, இறுதித் தோல்வி என்னமோ நிச்சயம் நமக்குத்தான்!

**லேனா தமிழ்வாணன்**

# மிருகத்தனமான செயற்பாடு!
# கண்டிக் கலவரம் தொடர்பில் நவிப்பிள்ளை கடும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் நம்பிக்கையை குறையச் செய்துள்ளதாக மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளை மதக்கலவரம் என்று எடுத்துக் கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அது கிளர்ச்சி மற்றும் போர் அனுபவங்களைக் கொண்ட ஒரு சமூகத்தில் ஒரு மிருகத்தனமான செயற்பாடு என்று அவர் விமர்சித்துள்ளார்.



கண்டியில் இடம்பெற்ற கலவரங்கள் தொடர்பில் குற்றவாளிகள் தண்டிக்கப் படாவிட்டால் நாளை ஏனையவர்கள் சட்டத்தை தமது கைகளில் எடுக்கத் தயங்கமாட்டார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்த அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றும் என்று நம்பிக்கை வைத்திருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்

எனினும் அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் நம்பிக்கையை குறையச் செய்துள்ளன.

ஐக்கிய நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இலங்கையால் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியாது என்றும் நவநீதம்பிள்ளை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார். (இ-7)

# நாடு கடத்திய ஈழ அகதிக்கு பெருந்தொகை நட்டஈடு செலுத்தியது சுவிஸ் அரசு!

(ஜெனிவா)

சுவிட்சர்லாந்தில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கைத் தமிழ் அகதி ஒருவருக்கு சுவிஸ் அரசாங்கம் பெருமளவு நட்டஈடு செலுத்தி இருப்பதாக அந்த நாட்டின் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

நாடு கடத்தப்படும் இலங்கை அகதிகள், இலங்கையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ள போதும். அண்மைக்காலமாக இலங்கையைச் சேர்ந்த தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை சுவிட்சர்லாந்து நிராகரித்து வருகிறது.

இலங்கை தமிழ் அகதி ஒருவரின் விண்ணப்பத்தையும் அண்மையில் சுவிட்சர்லாந்தின் அதிகாரிகள் நிராகரித்து அவரை நாடுகடத்தியுள்ளனர்.

நாடு கடத்தலின் பின்னர் இலங்கையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் சுவிட்சர்லாந்துக்கு தப்பிச் சென்று வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அவர் துன்புறுத்தப்பட்டமையை உறுதி செய்த நீதிமன்றம், அவருக்கு நட்டஈட்டை வழங்குமாறு அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது. இதன்படி அவருக்கு சுவிஸ் அரசாங்கம் பெருந்தொகையான நட்டஈட்டை வழங்கி இருப்பதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# இலங்கை அரசின் பேச்சில் நம்பிக்கையிழந்த சர்வதேசம்

## சிறிநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கை அரசில் இன்றைய நிலையில் இழுத்தடிப்புகளும், கால தாமதங்களும் இடம்பெறுகின்றமையால் அரசின் பேச்சில் நம்பிக்கை இழந்த நிலையில் சர்வதேச சமூகம் காணப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஜெனிவாத் தீர்மானங்களின் பிரகாரம் பொறுப்புக்கூறுதல் மற்றும் அதனுடன் தொடர்பான விடயங்களோடு தொடர்புபட்ட ஏனைய கருமங்களைச் செய்வதற்குரிய கால அவகாசம் போதியளவு கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது மனித உரிமைப் பேரவையின் செயலாளர் அல் ஹூசைன் ஒரு கருத்தினை வெளியிட்டிருக்கின்றார்.

அதாவது கொடுக்கப்பட்ட கால அவகாசத்தினை அரசு சரியான முறையில் பயன்படுத்தவில்லை அல்லது போதியளவு முன்னேற்றம் கண்டிருக்கவில்லை என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

அதனடிப்படையில் பார்க்கின்ற போது அவர் சொல்லியிருக்கின்ற விடயம் மிக முக்கியமானதாக அமைகின்றது.

அதாவது இனிமேல் சர்வதேச சட்டத்தின் பிரமாணங்களுக்கு அமைவாக மனித உரிமைப் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது பொறுப்புக்கூறுகின்ற அந்தப் பொறிமுறையின் போது தனது செயற்பாட்டினை சர்வதேச சட்டத்திற்கு அமைவாகக்கொண்டுசெல்ல வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

ஆரம்ப காலத்தில் இந்த உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலமாக இந்த விடயங்களைக் கையாளலாம் என்று சொல்லிக் கொண்டிருந்த இந்த அரசு இன்றைய நிலையில் இழுத்தடிப்புகளும், கால தாமதங்களும் இடம்பெறுகின்றமையால் அரசின் பேச்சில் நம்பிக்கை இழந்த நிலையில் சர்வதேச சமூகம் காணப்படுகின்றது.

இந்த அடிப்படையில் இனி வருகின்ற காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், யுத்த குற்றங்கள் தொடர்பான விடயங்களுக்கு நிச்சயமாக சர்வதேச சட்டத்தினைப் பாய்ச்ச வேண்டும் என்ற கருத்தினை மனித உரிமைச் செயலாளர் முன்மொழிந்திருக்கின்றார்.

எனவே சர்வதேசத்தை ஏமாற்றிவிடலாம் சர்வதேசத் திடமிருந்து தப்பித்துவிடலாம் அல்லது காலத்தை இழுத்தடிப்பதன் மூலமாக தங்களுடைய சாகசங்களை நிகழ்த்திவிடலாம் என்று இந்த அரசு ஒரு வகையில் தப்புக் கணக்குப் போட்டால் இனி வருகின்ற காலத்தில் இந்த சர்வதேச சட்டத்தின் இறுக் கத்திற்குள்ளாக வேண்டிய ஒரு நிலைமையும் இலங்கை அரசுக்கு இருக்கும் எனத் தெரிவித்தார். (இ-7)

# பாஹியன்கல குகையை பாதுகாக்க நடவடிக்கை



(கொழும்பு)

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாஹியன்கல குகை மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் கடந்த காலங்களில், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலேயே இந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தின் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் பி.வி.மந்தாவெல தெரிவித்தார்.

இதுவரை இந்த குகை பிரதேசத்திற்கு பாதிப்பும் ஏற்படவில்லை என்று ஆய்வுகளிலிருந்து தெரிய வந்துள்ளது. இப்பினும் இந்த குகையையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் பாதுகாக்க வேண்டிய தேவை தற்சமயம் ஏற்பட்டுள்ளதாக பி.வி.மந்தாவெல சுட்டிக்காட்டினார்.

மத்திய கலாசார நிதியம் இதற்கான நிதி உதவியை வழங்குகிறது. (இ-7)

# கறுப்புப் பட்டியலிலுள்ள ரஷ்ய நிறுவனத்திடம் இலங்கை விமானங்கள் கொள்வனவு

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கத்தின் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ரஷ்ய நிறுவனத்திடம் இருந்து இலங்கை விமானப்படைக்காக விமானங்கள் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக, ரிவிர சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.ரஷ்ய அரசுக்குச் சொந்தமான, Rosoboronexport நிறுவனம் ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனம், 2014ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க திறைசேரியினால் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிறுவனத்தின் மூலமே இலங்கை விமானப் படைக்கான விமானங்களைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

எம்.ஐ-171 உலங்கு வானூர்திகள்-10, ஐஎல்-76 எம் சரக்கு விமானங்கள் -02, எஸ்.யூ-30 தாக்குதல் போர் விமானங்கள்-06 என பனவே இந்த நிறுவனத்தின் மூலம் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# வெறுப்புணர்வுக் கருத்துக்களை வெளியிட்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துக

## கண்டிக் கலவரத்தைக் கண்டித்து ஜெப்ரி பெல்ட்மன் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ஜெப்ரி பெல்ட்மன் கண்டித்துள்ளார்.

இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள், வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று முன்தினம் கருத்து வெளியிட்டுள்ளார்.

அத்துடன், வன்முறைகளில் ஈடுபட்ட வெறுப்புணர்வுக் கருத்துக்களை வெளியிட்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துமாறும் அவர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.



இலங்கையின் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் பெல்ட்மனைச் சந்தித்த போது, இலங்கையில் சட்டம் ஒழுங்கு மீறப்பட்டதையும் முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் வர்த்தக நிலையங்கள் மீது குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களையும் கண்டித்துள்ளார்.

அத்துடன் இதுபோன்ற சம்பவங்கள் மீள நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் சட்டத்தின் ஆட்சியை பாகுபாடு இன்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

## இலங்கையில் வன்முறை

## ஐக்கிய அரபு இராச்சியம் பிரஜைகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளையடுத்து ஐக்கிய அரபு இராச்சியம் தனது பிரஜைகளுக்கு அவசர எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இலங்கைக்கு சுற்றுலா செல்லும் பயணிகளுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம் கண்டி நகரத்தை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் காரணமாக இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் போது அதிக அவதானமாக இருக்குமாறு ஐக்கிய அரபு அரசாங்கம் தன்னாட்டுப் பிரஜைகளுக்கு அறிவித்துள்ளது.

சுற்றுலா ஆலோசனை அறிக்கை ஒன்றினை கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய அரபு இராச்சிய தூதரக அலுவலகம் டுவிட்டர் பதிவினூடாக வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் ஐக்கிய அரபு இராச்சிய பிரஜைகள், மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களைத் தவிர்க்குமாறும் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் உதவி தேவைப்பட்டால் தூதரகத்திற்கு விரைவாக தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளுமாறு தூதரக அதிகாரிகள் தங்கள் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை இலங்கையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத்தூதுவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## கடுகதி புகையிரதத்தில் மோதியவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெயங்கொட - மஹலேகொட புகையிரத நிலையத்தில் புகையிரதத்தில் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த கடுகதி புகையிரதத்தில் மோதி நேற்றுக் காலை இவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 55 வயதான நபரொருவர் என பொலிஸார் எனத் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை. (இ-7)

## மகிந்த-மைத்திரி உரையாடல்



(கொழும்பு)

இந்நாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் தொலைபேசி உரையாடல் இரண்டுமுறை இடம்பெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து செய்திகள் வெளியாகியுள்ளன.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இருவரும் தொலைபேசி ஊடாக கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடைபெற்று முடிவடைந்த உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்றை நடத்த அமைச்சர்கள் பாரிய முயற்சி ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவை மாற்றமும் இதுவரை இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## லசந்த கொலை தொடர்பான விசாரணை நீதிமன்ற தடையுத்தரவுகளால் மந்தகதி

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதைத் தடுத்து நீதிமன்றம் தொடர்ந்தும் வழங்கி வரும் தடையுத்தரவுகளால், அந்த கொலை தொடர்பான விசாரணைகள் சீர்குலையும் நிலைமை உருவாகியிருப்பதாக தெரியவருகிறது.

இந்தப் பின்னணியில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வரும் விசாரணைகள் மந்தகதியில் நடப்பதாக கூறப்படுகிறது.



சந்தேக நபர்களைக் கைதுசெய்து வாக்குமூலங்களை பெற்றுக்கொள்வது, விசாரணைகளை நடத்தி வரும் அணியினருக்கு விசாரணைகளை நடத்தவும் தகவல்களை பெற்றுக்கொள்ளவும் இலகுவாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

லசந்த விக்கிரமதுங்க கொலைச் சம்பவம் தொடர்பில் தான் கைது செய்யப்படுவதை தடுக்குமாறு கோரி முன்னாள் பொலிஸ்மா அதிபர் அண்மையில் நீதிமன்றத்தில் தடையுத்தரவை பெற்றுக்கொண்டார்.

அதனைத் தவிர முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் தன்னைக் கைது செய்வதைத் தடுக்க நீதிமன்றத்தில் தடைகோரும் போது தடைகோரும் தரப்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## வீதி விபத்தில் சிக்கிய இரு இளைஞர்கள் பலி

(திருமலை)

கிண்ணியா - தம்பலகாமம் பிரதான வீதியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் வெள்ளைமணல், ஹிஜ்ரா நகர் பகுதியைச்சேர்ந்த நவீட் இலாகி (வயது 21) மற்றும் வெள்ளைமணல், நீரோட்டுமுனை பகுதியைச்சேர்ந்த இராணுவச் சிப்பாய் பாஹீம் அக்ரம் (வயது 22) ஆகியோர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சரை சந்தித்த புலம்பெயர் சிங்களவர்கள்

(லண்டன்)

பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் சிங்கள மக்களின் அமைப்பான உலக இலங்கையர் பேரவையின் பிரதிநிதிகள் மூன்று பேர் அந்த நாட்டின் மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டோபியாஸ் எல்வுட்டை சந்தித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றதாக, இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவில் வசிக்கின்ற இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பிலான அறிக்கை ஒன்றையும் இந்தக் குழு அமைச்சரிடம் கையளித்துள்ளது.

கடந்த பெப்ரவரிமாதம் 4ம் திகதி லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்துக்கு முன்னால் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது உயர்ஸ்தானிகரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரிகேடியேர் பிரியங்க பெர்னாண்டோ, ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் செயற்பட்டிருந்தார்.

இதுதொடர்பான காணொலியும் வெளியாகி இருந்தது. இதனை அடுத்து அவர் மீள இலங்கைக்கு அழைக்கப்பட்டு, தற்போது சீனாவிற்கு கற்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அவர் மீள இலங்கைக்கு அழைக்கப்பட்டமையை கண்டித்துள்ள குறித்த அமைப்பு, விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களின் செயற்பாடுகளால் பிரித்தானியாவிலுள்ள (சிங்கள) இலங்கையர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## வட மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் காரியாலயத்தின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

வட மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் காரியாலயத்தின் கூரை மீது ஏறி இருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வடமத்திய மாகாண சபை சுகாதார திணைக்களத்தின் 4 சாரதிகளை வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நேற்று இடம்பெற்றது.

இந்த இடமாற்றத்தை இரத்துச் செய்யும் வரை தாம் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# சர்வதேச சமூகம் மீது திடீர் கரிசனை

# சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் அச்சுறுத்தலாக அமையக் கூடாது

## ஜனாதிபதி மைத்திரி ஜப்பானில் ஆலோசனை



(டோக்கியோ)

சீனாவின் பட்டுப்பாதை திட்டம் சர்வதேச சமூகத்துக்கு அச்சுறுத்தலாக அமைய இடமளிக்கக் கூடாது என சர்வதேச நாடுகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நேற்று ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்டார். இந்த நிலையில், என்.எச்.கே என்ற ஜப்பான் ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தெற்காசியாவில் மிகப்பெரிய துறைமுகமாகும்.

இந்த நிலையில், சீனா ஏனைய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமையாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எனினும், துறைமுகத்தை சீனா, தமது இராணுவ நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும் என்பது தொடர்பான கரிசனையை தாம் அறிந்து வைத்திருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்த நிலையில், இருதரப்பு உறுதிப்பாடுகளையும், உடன்படிக்கையையும் மீறுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்து - பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திர மற்றும் திறந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்க, தமது நாட்டில் ஜப்பான் மேற்கொள்ளும் உட்கட்டமைப்பு பணிகளை ஊக்குவிப்பதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

## இனவாதக் கருத்து; நல்லிணக்கம் பாதிப்பு மாணவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(கொழும்பு)

அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கும் காலப்பகுதியில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சமூகவலைத்தளங்களின் மூலம் போலி பிரசாரங்களை மேற்கொண்ட பாடசாலை மாணவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த மாணவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் லால் பண்டார நேற்று உத்தரவிட்டுள்ளார். குறித்த வழக்கில் மாணவர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி மூலம் பிணை கோரப்பட்டிருந்த போதும் பிணை வழங்க முடியாது என நீதவான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வாகனங்களின் வேகம் குறைவு

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களின் வேகத்தினை கண்காணிக்க புதிய வேகக் கட்டுப்பாட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதனை அடுத்து வாகனங்களின் வேகம் குறைவடைந்துள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பராமரிப்பு மற்றும் செயற்பா ட்டு இயக்குநர் எஸ்.ஓபநாயக தெரிவித்துள்ளார்.


மேலும் வாகனங்களின் வேகக்கட்டுப்பாட்டின் காரணமாக விபத்துக்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும் பேருந்து வண்டிகள் தற்பொழுதும் வேகக்கட்டுப்பாட்டை மீறி பயணிப்பதாக தகவல் கிடைத்திருப்பதாக இயக்குநர் எஸ். ஓபநாயக மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1355

Search for people, places and things Nagendram Home

### விக்னேஷ்

மஞ்சளா இருக்கிற எலுமிச்சையை பிழிஞ்சா வெள்ளையா சாறு வருது...



வெள்ளையா இருக்கிற முட்டையை உடைச்சா மஞ்சளா கரு வருது... இதாங்க வாழ்க்கை...

### விமலன்


மழைகாலத்தில வெள்ளம் வந்தா வெள்ள நிவாரண நிதி குடுக்கிற மாதிரி



வெயில் காலத்தில வெப்ப நிவாரண நிதி குடுத்தால் என்ன...

### விஸ்வா

மற்றவர் உன்னை குறை கூறுவதை காமெடியாகப் பார்



மற்றவரை நீ குறை கூறுவதற்கு முன் கண்ணாடியைப் பார்...

### கனிசன்

காலைல ஒரு பொண்ணு ஸ்கூட்டில வந்து லைட்டா உரசியது... வலியெல்லாம் இல்லை...



ஆனா, அந்த பொண்ணு ஸாரி அண்ணானு சொல்லிச்சே... அப்பதான் லைட்டா நெஞ்சு வலிக்க ஆரம்பிச்சுது

### மதுசன்

செத்த பிறகு சொர்க்கத்துக்கு போறத நினைச்சாலே பயமாதான் இருக்கு...



அங்க நமக்கு தெரிஞ்ச பிரண்ட் ஒருபயகூட இருக்கமாட்டான்

### கண்ணன்

திருமணத்திற்குப் பிறகு காதுகள் இருப்பதை மறப்பவன்



புத்திசாலி...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் தொடரும் இனவாதத் தாக்குதல்களால் மத்திய கிழக்கு நாடுகளுடன் பகைமை ஏற்படும் அபாயம்

## சபாநாயகர் கரு ஜெயசூரிய அச்சம்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுடன் பகைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.


இனவாத அடிப்படையில் இலங்கையில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டால், மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் முடக்கப்படக்கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் சில நாடுகளை வருத்தமடையச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றி வருவதாகவும் இந்த இலங்கைப் பணியாளர்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டால் நாட்டில் பாரியளவு பிரச்சினைகள் ஏற்படக் கூடும் எனவும் பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இனவாதம், மதவாதம் உலகின் எந்தவொரு தரப்பிற்கும் நன்மையை ஏற்படுத்தியதில்லை என சுட்டிக்காட்டியுள்ள சபாநாயகர் கடும்போக்குவாதங்களை கைவிட்டு அனைவரும் சமாதான வழிகளில் சகோதரத்துவத்துடன் வாழ்வதற்கு கற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)



## உண்டியலைத் திருடிய இளைஞன் கைது



(ஏறாவூர்)

ஏறாவூர்- கொம்மாதுறைப் பிரதேசத்திலுள்ள காளி கோயில் உண்டியலைத் திருடிய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொம்மாதுறை 10ஆம் கட்டை ரயில் பாதையோடு அமைந்த புதருக்குள் மறைந்திருந்து திருடப்பட்ட உண்டியலை உடைத்து அதனுள் இருந்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்த போதே குறித்த இளைஞன் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, உண்டியலில் காணிக்கையாக பக்தர்களால் இடப்பட்டிருந்த 7 ஆயிரத்து 179 ரூபாய் பணத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

## போராட்டத்தைப் பலப்படுத்தும் பல்கலை.கல்விசாரா ஊழியர்கள்




(கொழும்பு)

தமது தொழிற்சங்க நடவடிக்கையை பலப்படுத்தி நாளை நள்ளிரவு முதல் நாளாந்த சேவைகளில் இருந்து விலகி இருக்கப்போவதாக பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் ஒன்றிணைந்த குழு அறிவித்துள்ளது.

இதேவேளை வேதனப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட தமது ஆர்ப்பாட்டம் நேற்று 13 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டும் இது தொடர்பில் அதிகாரிகள் அவதானம் செலுத்தவில்லை என அதன் தலைவர் மல்வத்தகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சமூக வலைத்தளங்கள் முடக்கம் தகவலறியும் உரிமைச் சட்டத்தை கேள்விக்குட்படுத்தி நாமல் கருத்து

(கொழும்பு

அரசாங்கத்தின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தியதாக மார்தட்டிக்கொள்ளும் அரசாங்கம், சமூக வலைத்தளங்களை முடக்கி பேச்சு சுதந்திரத்தை இல்லாமல் செய்துள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சாடியுள்ளார்.



சமூக வலைத்தளங்கள் முடக்கப்பட்டுள்ளமை தொடர்பாக, அவர் நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள டுவிட்டர் பதவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றில் எந்த அரசாங்கமும் செய்யாத வகையில் தற்போதைய அரசாங்கம் சமூக வலைத்தளங்களை முடக்கி வைத்துள்ளதாக நாமல் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, தமக்கு சாதகமான நிலைப்பாட்டில் சமூக வலைத்தளங்கள் செயற்பட்ட போது அவற்றை புகழ்ந்த ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும், அவர்களுக்கு எதிரான நிலைப்பாடு ஏற்பட்டபோது ஏன் தடை செய்தனர் என்றும் நாமல் கேள்வியெழுப்பியுள்ளார்.

கண்டி மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையின் போது,

நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துக்களும் காட்சிகளும் பகிரப்பட்டதாக தெரிவித்து, சமூக வலைத்தளங்களை அரசாங்கம் முடக்கி வைத்துள்ளது.


பிரதேசத்தின் இயல்பு நிலை வழமைக்கு திரும்பியுள்ள நிலையில், விரைவில் அவற்றின் மீதான தடை நீக்கப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கண்டிக் கலவரம் தொடர்பான சொத்து மதிப்பீட்டுப் பணி ஆரம்பம்

(கண்டி)

கண்டியில் ஏற்பட்ட கலவர நிலைமையின் போது சேதமாக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப் பிரிவின் பொறியியல் பிரிவினர் நேற்று திங்கட்கிழமை இப்பணியை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது



வன்முறைச் சம்பவம் இடம்பெற்ற 3 இடங்களுக்கு அரசாங்கத்தின் உயரதிகாரிகள் சென்று பார்வையிட்டிருந்த நிலையில் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கண்டி, தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற மோதலில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து தெல்தெனிய, திகன உள்ளிட்ட பல பிரதேசங்களில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் சுமார் 30க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள், சுமார் 200க்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள், 100க்கும் அதிகமான வீடுகள் சேதமாக்கப்பட்டதாக கடந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மீண்டும் டெங்கு அபாயம்



(கொழும்பு)

மழையுடன் கூடிய கால நிலை காரணமாக மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.


இதேவேளை கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் டெங்கு நோய் குறைவடைந்துள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவின் விஷேட வைத்தியர் ப்ரஷிலா சமரவீர தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்களின் அவதானம் மற்றும் விழிப்புணர்வு காரணமாக டெங்கு நோய் நூற்றுக்கு 40 வீதமாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

கல்வியை மூலதனமாக கொண்ட தமிழ்மக்கள் மத்தியில்

# தமிழைக் கற்பிக்கக்கூட ஆசிரியர்கள் இல்லை

## லண்டனில் வைத்து சுட்டிக்காட்டினார் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை



ஒரு காலத்தில் கல்வியை மூலதனமாகக் கொண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் இன்று தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குக்கூட ஆசிரியர்கள் இல்லை எனக் கூறி இலங்கை கல்வி அபிவிருத்தி பிரித்தானிய அமைப்பின் அழைப்பின் பேரில் லண்டன் உயர் குன்று முருகன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தனது உரையை ஆரம்பித்தார்.

வட பகுதியின் இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொதுவான பொருளாதார நிலைமைகள் குறித்து அவரது பார்வையை அறியும் பொருட்டு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

வட மாகாண கல்வி நிலைமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவர் அவதானித்துள்ள போதிலும் அம்முன்னேற்றம் பல வகைகளில் மட்டுப்படுத்தப்படுவதாகவும் அதற்கான பிரதான காரணிகளையும் விளக்கினார். யாழ்ப்பாணத்திற்கு வெளியில் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் கூட நாட்டிற்குள் அதிக ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளதாகவும் வெளி மாவட்டங்களுக்குச் செல்பவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்வதால் அவ் ஆசிரியர்களிக் முழுமையான கவனம் அல்லது சக்தி முழுமையாக கிடைப்பதில்லை என்றார்.

### கல்வி நிலைமை

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இந்த இடைவெளியை தனியார் கல்வி நிறுவனங்கள் நிரப்புவதாகவும் தெரிவித்த அவர் இப் பாடங்களில் முன்னேற்றம் காணப்பட வேண்டுமெனில் வெளித் தலையீடு அதாவது அரச உதவிகளுக்கு வெளியில் வெளிநாட்டு உதவிகள் மூலம் குறிப்பிட்ட காலத்தில் வளர்ச்சியை ஏற்படுத்த உதவிகள் அவசியம் என்றார். விஞ்ஞான பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக அதற்கான கல்வி பயிலும் மாணவர் தொகை குறைகிறது.

எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்புக்களைத் தரும் விஞ்ஞானக் கல்வி இல்லாமையால் அதிகளவிலான வேலை வாய்ப்புக்களும் தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்காமல் போய் சமூகம் உயர்ந்த நிலையை அடைவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது.

வெளி மாவட்டங்களில் காணப்படும் போக்குவரத்துப் பற்றாக்குறை, குடும்ப வருமானப் பற்றாக்குறை போன்ற காரணிகளால் மாணவர் பாடசாலைக்குச் செல்வதும் குறைந்துள்ளது. சில சமயங்களில் ஆசிரியர்கள் தமது தொழில்களைப் பாதுகாப்பதற்காக அல்லது மாணவர்களின் குடும்ப நிலைமைகளை நன்கு புரிந்து கொண்ட காரணத்தால் தாமே வீடுகளுக்குச் சென்று கல்வியின் அவசியத்தை உணர்த்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் வகுப்பறைகளில் மாணவர் தொகை மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் தற்போது மாணவர்கள் தொகை மிகவும் குறைந்துள்ளது. சில பாடசாலைகளில் மாணவர் தொகை பற்றாக்குறையாக உள்ள நிலையிலும் இப் பாடசாலைகள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. இதனால் ஒரு சிறிய பிரதேசத்திற்குள் அதிக பாடசாலைகள் குறைந்த மாணவர்களுடன் இயங்கிச் செலவீனம் விரயமாக்கப்படுவதோடு, ஆசிரியர்களின் பணியும் வீணடிக்கப்படுகிறது.

இப்பாடசாலைகள் தொடர்ந்தும் இயக்கப்படுவதற்குக் காரணம் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியேறுவார்கள் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக அவை தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

வட பகுதியில் உயர் கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ளன. ஆனால் அக் கல்வியைப் பெறுவதற்கான மாணவர் தொகை வடபகுதியில் குறைந்துள்ளமையால் வெளி மாவட்டங்களின் மாணவர்களே அந்த இடைவெளியை அல்லது அப் பலாபலன்களைப் பெறுகின்றனர். பல்கலைக்கழகத்திற்கான மாணவர் அனுமதி தற்போது அதிகமாக உள்ளது. ஏனெனில் தனியார் பல்கலைக்கழகங்களும் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் வருகையும் அதிகம் காணப்படுவதால் உயர்கல்விக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

இதனால் பல்கலைக்கழக புதுமுகத்திற்கான போட்டி குறைவாக உள்ளது. வாய்ப்புகள் அதிகம் காணப்பட்ட போதிலும் கல்வியில் உள்ள உற்சாகப் பற்றாக்குறை பிரதான காரணி எனக் குறிப்பிட்டார்.

### வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் தொழிற்றுறை முதலீடுகள் வட பகுதியில் மிகவும் குறைந்துள்ளது. அங்கு உல்லாசப் பயணத்துறையை விஸ்தரிக்கும் வகையில் விருந்தினர் விடுதிகளே தற்போது அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இத்துறைக்குத் தேவையான, தகுதியான பயிற்சியுடையவர்கள் கிடைப்பதில்லை எனவும் இதற்குக் கலாசார உணர்வுகளும் தடையாக இருக்கலாம் என்றார்.

இவ்வாறான சேவைத் துறைக்கு பல்மொழி அறிவு அவசியம். குறிப்பாக ஆங்கில அறிவு அவசியம். இம்மொழி அறிவு குறைந்துள்ளமையால் அந்த வேலைவாய்ப்புகளையும் வெளியாரே பெறுவதாகத் தெரிவித்தார். இதனால் குறிப்பாக சுகாதாரத்துறையில் தாதி வேலைகளுக்கு விண்ணப்பிப்போர் தொகை குறைந்துள்ளதைக் குறிப்பிட்டார். பல முதலீடுகள் வேலை வாய்ப்பை அதிகரிப்பனவாக இல்லை என்றார்.

பட்டதாரிகளில் பலர் கலைத் துறைகளில் பட்டங்களை வைத்திருப்பதால் விகிதாசார அடிப்படையில் கிடைக்க வேண்டிய தொழில்களையும் அரசியல் தலையீடுகள் இருந்த போதிலும் பெற முடியாதுள்ளனர். இப் பட்டதாரிகளில் 70 சதவீதத்திற்கு அதிகமானவர்கள் இளைஞர், யுவதிகள் ஆகும். அதில் பெரும்பாலோர் யுவதிகளாகும்.

அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்காமையால் குடும்ப வாழ்விற்குள் செல்வதைத் தள்ளிப் போடுகின்றனர்.

இதனால் பிறப்பு விகிதம் குறைவடைந்துள்ளதோடு பொருளாதாரக் காரணிகளால் பிள்ளைகளின் தொகையும் ஒன்று அல்லது இரண்டாக சுருங்கி விடுகிறது.

### மீன்பிடி, விவசாயம்

விவசாயம், மீன்பிடி தொடர்பாக தெரிவிக்கையில், விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான உட்கட்டுமானங்களின் பற்றாக்குறையும் உட்பிரதேசங்களுக்குள் போதிய போக்குவரத்து இல்லாமையாலும் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளமையாலும் விவசாய வருமானம் போதியளவாக இல்லை. அதே போலவே மீன்பிடித் தொழிலில் அந்நியப் படகுகளின் போட்டியும் போரின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த மீன்பிடிச் சமூகம் பொருளாதார ரீதியில் இப் போட்டியில் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இருப்பதாலும் சிங்கள சமூகத்தினரும் அதிக முதலீடுகளில் ஈடுபடுவதாலும் மீன்பிடி வாய்ப்புகளும் நலிந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

### சமூகம்

இத்தகைய ஒட்டுமொத்த நிலைமைகளால் குடும்பங்களின் தேவைகள் பெருகிய வேளையில் வருமானம் குறைந்தமையால் குடும்பங்கள் மத்தியில் சச்சரவுகள், அமைதியின்மை, குடிபோதை, போதைவஸ்து பாவனை, திருட்டு எனச் சமூக விரோத போக்குகளின் தளங்களாக சமூகம் மாறி வருவது குறித்துக் கவலையை வெளியிட்ட அவர், இவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டம் ஒழுங்கைக் கவனிக்கும் பிரிவினரும் சரியாகச் செயற்படாததால் அவை மேலும் விரிசல் அடைந்து மேலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

அத்துடன் உள்நாட்டு மூலவளங்களும் சட்டத்திற்குப் புறம்பான வகையில் கொள்ளையிடப்படுகிறது. உதாரணமாக மணல் திருட்டு, பசுக்கள் திருட்டு என்பது தினசரி நிகழ்வுகளாக உள்ளதாகத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் ஏற்பட்டு வரும் அகதிகள் தொடர்பான பிரச்சினைகளும் இறுக்கமான சட்ட மூலங்களும் வெளிநாட்டவரைத் திருமணம் செய்தும் இணைவதற்கான நீடித்த கால அவகாசமும் இளைஞர், யுவதிகள் மத்தியிலே காணப்படும் வெளிநாட்டு மோகத்தினைத் தணித்துள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழ்ப் பிரதேச அபிவிருத்தியில் கவனம் செலுத்துவது அவசியம் எனத் தெரிவித்த அவர் தற்போது வட பகுதியில் துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி, மன்னார் கப்பல் போக்குவரத்து என்பன வளர்ந்து வரும் தமிழ்நாட்டு அபிவிருத்தியை வடக்கு- கிழக்குப் பகுதியில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க உதவலாம். இதற்குப் பொருத்தமான தலைமுறையும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## யாழ்.மாவட்டத்தில் ரூ.654 மில்லியன் செலவில் பொருளாதார வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை அமைச்சராகக் கொண்ட தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் படையினரால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் 654 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ன்னெடுக்கப்பட்ட பல திட்டங்கள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் வலி. வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் தையிட்டி, மயிலிட்டி, வறுத்தலைவிளான், பலாலி, சண்டிலிப்பாய் பிரதேசங்களில் படையினரால் கட்டம் கட்டமாக அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் 19 உள்ளக வீதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதில் 11 வீதிகள் கடந்த 5 ஆம் திகதி மக்கள் பாவனைக்கு, திறந்து வைக்கப்பட்டது. இதற்கான செலவு ரூபா 51 மில்லியன் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இதில் பலாலி தெற்கு வீட்டுத்திட்ட உள்ளக வீதி, தாழையடிவீதி, குகன் வீதி, வைரவர் உள்ளக வீதி, சிவன் உள்ளக வீதி, வேலன் உள்ளக வீதி, துறைமுக உள்ளக வீதி, கலைமகள் உள்ளக வீதி, ஈஸ்வரி உள்ளக வீதி, அம்மன் உள்ளக வீதி, விநாயகர் உள்ளக வீதி, கொட்டுப்புலம் உள்ளக வீதி, வள்ளுவர் உள்ளக வீதி, நான்முகன் உள்ளக வீதி, புன்னாலைக்கட்டுவன் வீட்டுத் திட்ட உள்ளக வீதி, அண்ணமார் உள்ளக வீதி போன்றவை உள்ளடங்குகின்றன.




மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த காலங்களில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களான பலாலி வடக்கு, ஊறணி, பொலிகண்டி மற்றும் அராலி ஆகிய இடங்களில் இறங்குதுறை மற்றும் படகு கட்டுமிடங்களுக்கு 296 மில்லியன் ரூபா 2017 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்கள் இவ்வருடம் நடைபெற்று வருகின்றன. அத்துடன் நாகர்கோவில் பிரதேசத்தில் 78 படகுக்கு வெளியிலான மீன்பிடி மோட்டார் இயந்திரங்கள் சண்டிலிப்பாயில் மீன்பிடி ஏல விற்பனைத் தளம், மீன் வலைகள் திருத்துமிடம், மீனவர்கள் இளைபாறுமிடம் என்பனவும் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டன என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

அத்துடன் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் 115 கிணறுகள் புனரமைக்கப்பட்டன. இடம்பெயர்ந்த மீள்குடியேறிய மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிறுவர் பராமரிப்பு மற்றும் மகப்பேறு பிரிவுகளுக்கு 70 மில்லியன் ரூபாவில் நவீன மருத்துவ உபகரணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உபகரணங்கள் பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. புற்றுநோய் வைத்தியசாலைக்கு வெளிநோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் விடுதிக்கு 16.2 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 2 கட்டடத் தொகுதிகள் அமைக்கும் வேலைத்திட்டம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் முடிவுறுத்தப்படும்.

பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் கரவெட்டி வேதாரணிய வித்தியாலயத்திற்கு 2 மாடிக் கட்டடமும், யாழ். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு கணனி ஆய்வுகூட அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கு 2017 இல் நிதி ஒதுக்கப்பட்டதுடன் இவ்வருடம் முடிவுறுத்தப்படும்.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு நெகிழும் தன்மையுடன் கூடிய செயற்கைக் கால்களை உற்பத்தி செய்வதற்கும் கற்கை வசதிகளை மேம்படுத்துவதற்கும் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் 9 மில்லியன் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு அவை பாவனையிலுள்ளது என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோம்பாவிலில் படையினர் கோருகின்ற 25ஏக்கர் காணிகளையும் வழங்க முடியாது

## அபிவிருத்திக்குழு கூட்டத்தில் நேற்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் படையினர் கோருகின்ற 25 ஏக்கர் காணிகளையும் படையினருக்கு வழங்க முடியாது என வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் இவ்வாண்டுக்கான முதலாவது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

குறித்த காணி விடயம் தொடர்பில் ஆராயப்பட்ட போதே வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பில் தொடர்ந்து கூறுகையில்,

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில் ஏ/35 வீதிக்கு அருகிலுள்ள தற்போது படையினர் பயன்பாட்டிலுள்ள 25 ஏக்கர் காணிகளையும் தமக்கு வழங்குமாறு பிரதேச செயலர் ஊடாக கடந்த மாதம் 26ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கோரியிருந்தனர். அப்போது வட மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் இணைத் தலைவர்கள் குறித்த காணியை உடனடியாக படையினருக்கு வழங்க முடியாது. அது தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் மக்களுடன் கலந்துரையாடி அதற்கான முடிவுகளை எடுக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த காணி விடயம் தொடர்பில் ஆராயப்பட்ட போது. இக்காணியானது பொதுமக்களுக்கு பயன்படக் கூடியதாக இருப்பதால் இதனை உடனடியாக வழங்கமுடியாதென்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் படையினர் வைத்திருக்கின்ற பொதுமக்களின் காணிகளை விடுவிக்க வேண்டுமென தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. (2-315)

# வவுனியா வடக்கு பிரதேச செயலக

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவர்களின்றி கூடியுள்ளது

(பனிக்கன்குளம்)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக்காலை 9.45 மணியளவில் பிரதேச செலயாளர் க.பரந்தாமன் தலைமையில் ஆரம்பமானது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு இணைத் தலைவர்கள் சமுகமளிக்காத நிலையிலும் பெரும்பாலான திணைக்களங்களின் பணிப்பாளர்கள் கலந்துகொள்ளாத நிலையிலும் கூட்டம் ஆரம்பமானது.

இவ்வாறு ஒரு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது இணைத்தலைவர்கள் அற்ற நிலையிலும் குறிப்பிட்டளவு திணைக்களத் தலைவர்கள் அற்ற நிலையிலும் கூடும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் எடுப்பதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் திணைக்களப் பணிப்பாளர்கள், இணைத்தலைவர்கள் சமுகமளித்திருப்பது மிகவும் அவசியமாகும். அவர்கள் அற்ற நிலையில் கூடும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் பயனற்றதாகவே அமையவுள்ளதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நேற்றையதினம் நடைபெற்று முடிந்த வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ம.தியாகராசா, பொலிஸார், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கலந்து கொள்ளவில்லை. (2-250)

# வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 4ஆயிரத்து 500 வீடுகள் தேவை

## பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டத்தில் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 4 ஆயிரத்து 500 வீடுகளும் மலசலகூடங்களும் தேவையுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி குழுக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இணைத் தலைவர் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற போதே உதவி திட்டப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 4 ஆயிரத்து 500 வீடுகளும் மலசலகூடங்களும் தேவையாகவுள்ளது. இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த வீட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோரால் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதி விபரங்கள் தொடர்பிலும் தெரிவித்திருந்தார். (2-281)

# மயானங்களின் எல்லைகள் தெளிவில்லை புனரமைப்பு நடவடிக்கைகளில் தாமதம்

## வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வவுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் பல மயானங்களின் எல்லைகள் தெளிவாக இல்லாமையினால் புனரமைப்பு நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் திருமதி. சுகந்தி கிசோர் தெரிவித்துள்ளார்.



வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் மயானங்களின் புனரமைப்பு தொடர்பில் வவுனியா பிரதேச செயலக அபிருத்திக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வவுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 67 மயானங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பல மயானங்களின் எல்லைகள் தெளிவாக இல்லை. இந்த நிலையில் எல்லை தெளிவுபடுத்தப்பட்டுள்ள மயானங்களை நாம் கட்டம் கட்டமாக புனரமைத்து வருகின்றோம். இது தவிர, சில மயானங்களுக்குரிய பாதைகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பாதைகளை சீர் செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெறுகின்றது எனவும் தெரிவித்தார். (2-250-281)

# தென்னை பயிர்ச் செய்கை சபையின் விழிப்புணர்வு செயற்றிட்டம்





(கிளிநொச்சி)

தென்னை பயிர்ச்செய்கை சபையும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மாயவனூர் கற்பகதரு சங்க உறுப்பினர்களும் இணைந்து, பெண்களின் வாழ்வில் தென்னையும் கற்பகதரு சங்கமும் என்ற தொனிப்பொருளில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் விழிப்புணர்ச்சி நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வு கடந்த 8 ஆம் திகதி மாயவனூர் பொதுநோக்கு மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்னை பயிர்ச்செய்கை சபையினர் பண்ணைத்திட்டமிடல் உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இப்பகுதியில் குரங்குகளின் தொல்லையினால் இளம் தென்னைகள் பாதிக்கப்படுவது தொடர்பிலும் யானைகளினால் ஏற்படும் தாக்கங்கள் தொடர்பிலும் மக்கள் சுட்டிக்காட்டினர். அப்பகுதியில் பெண்கள் வருமானமின்மையினால் அவதிப்படுவதும் ஆண்கள் அதிகமாக மதுபாவனையை மேற்கொள்வதும் மக்களால் தெரிவிக்கப்பட்டது. இதற்காக மதுபாவனை தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமெனவும் மக்கள் கேட்டுக் கொண்டனர். இதன்போது கருத்துத் தெரிவித்த பிராந்திய முகாமையாளர், கற்பகதரு சங்கங்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்து மானியங்களைப் பெறுமாறும் பெண்களை சிறுபராயத்தில் இருந்தே பாரபட்சமின்றி முன்னேற்றுமாறும் கூறினார். அத்துடன் தென்னை சார் கைத்தொழில்களை ஒன்றிணைந்து செயற்படுத்தும்பட்சத்தில் வருமானத்தை அதிகரிக்க முடியுமெனவும் கருத்துத் தெரிவித்தார். மேலும் தென்னை தொடர்பான தொழில்நுட்ப கருத்துக்களும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் சதனுஜனினால் மக்களுக்கு வழங்கப்பட்டன. (2)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 45 | 50 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 58 | 60 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 70 | 80 |
| தக்காளி | 40 | 20 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 35 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 60 |
| கரட் | 60 | 80 | 70 | 160 |
| பூசணி | 80 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 120 | 50 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 75 | 60 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 30 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 110 | 160 | 160 |
| பீற்றூட் | 40 | 30 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 70 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 500 |
| போஞ்சி | 80 | 70 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | — | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 20 | 40 |
| தேசிக்காய் | 80 | 80 | 60 | 80 |
| தேங்காய்(ஒன்று) | 90 | 35-90 | 80 | 75 |
| இராசவள்ளி | 160 | 135 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 80 | 65 | 80 | 120 |
| முள்ளங்கி | 20 | 30 | 40 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 60 | 80 |

நாய்க்கு தவிசு (அரசு இருக்கை) இட்டாலும் குரைக்கவே செய்யும்.

*– தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தெருநாயை அழிப்பது யார் பொறுப்பு?

அரசியல் பற்றித் தொடர்ந்து சிலாகிப்பது பலருக்கும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

எதுவுமில்லாத அரசியலை அப்படிப் பேசினால் என்ன? இப்படிப் பேசினால் என்ன? என்பதாக மக்கள் கருதிக் கொள்கின்றனர்.

சரி, சமூகம் சார்ந்த விடயத்தைப் பேசலாம் என்றால், அதனை யார்தான் கவனிக்கிறார்கள்.

சமூகம் என்பதெல்லாம் வெறும் போலி. நம்ம நம்ம அலுவல்களைப் பார்த்து விட்டுப் போய்க் கொண்டே இருக்க வேண்டும் என்பதாக சமூகப் பொறுப்புள்ளவர்கள் நினைக்கின்றார்கள்.

இதனால் மக்கள் படும் கஷ்டங்களும் துன்பங்களும் நீங்கியபாடில்லை.

சமூக மட்டத்தில் பொதுமக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற போதிலும் அவை அனைத்தும் மௌனமாக அனுபவிக்கப்படுகின்றதாகிவிட்டதேயன்றி அதற்கு முடிவு கட்டப்படுவதாக இல்லை.

இவ்வாறு நாம் கூறுகின்ற விடயத்துக்கு நல்ல ஒரு உதாரணம் தெருநாய்த் தொல்லையாகும்.

ஒவ்வொரு நாளும் தெருநாய்க்கடிக்கு ஆளாகின்றவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவண்ணமுள்ளனர்.

இதற்காக ஏகப்பட்ட அரச பணம் மருந்து என்றவாறாகச் செலவாகின்றது.

சிலவேளைகளில் தெருநாய்க்கடிக்கு ஆளானவர்கள் சிகிச்சை பெறத் தவறியதன் காரணமாக உயிரிழந்த சோக சம்பவங்களும் உண்டு.

அதேநேரம் தெருநாய்களின் தொல்லை நாளாந்தம் ஏற்படும் விபத்துக்கள் கொஞ்சமல்ல.

நாய் குறுக்கே பாய்ந்துவிட்டது. அதனால் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்துவிட்டேன். எலும்பு முறிந்துவிட்டது. சுகமடைய ஆறு மாதம் ஆகும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

என் நாளாந்த உழைப்பில் சீவியம் நடத்தும் என் குடும்பம் எப்பாடுபடப் போகிறது என்ற ஏக்கத்துடன் கூடிய துன்பங்கள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் அவை பற்றி அறியாதவர்களும் உணராதவர்களுமாகப் பலர் உள்ளனர்.

ஆக, வடபுலத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கக்கூடிய தெருநாய்த் தொல்லைகளை முற்றாக இல்லாமல் செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

குறிப்பாக வடக்கின் ஆளுநர் இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஒரு பொருத்தமான முடிவை எடுக்க வேண்டும்.

இல்லையேல், நாய்க்கடிக்கு இலக்காகுதல் – வீதி விபத்துக்களுக்கு ஆளாகுதல் என்ற நிலைமை தொடருவதுடன் மருத்துவச் செலவுகளும் அதிகரிக்கவே செய்யும்.

ஆகையால் வடக்கின் ஆளுநர் இதுவிடயத்தில் அதிகூடிய கரிசனை எடுப்பது அவசியமாகும்.

தெருநாய்களின் தொல்லை தொடர்பில் சமூக அக்கறை கொண்ட மருத்துவர்கள் இவ்விடயம் குறித்து ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்தபோதிலும் அது தொடர்பில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்பட்டதாக இல்லை என்பதே முடிவாக உள்ளது.

ஆகையால் தெருநாய்த் தொல்லை தொடர்ந்தும் நீடிப்பதை முடிவுறுத்த பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து தெருநாய்களை இல்லாமல் செய்ய வேண்டும்.

# வெகுவிரைவில் மகிந்த தலைமையில் புதிய ஆட்சி அமைத்துக் காட்டுவோம்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை நிராகரித்துவிட்டு எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையே மக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்கால ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இரா.சம்பந்தனினால் எவ்வகையிலும் முடியாத காரியம் என்று தெரிவித்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், வெகு விரைவில் ஆட்சியைக் கைப்பற்றி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் புதிய ஆட்சியை அமைப்பதாகவும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிநடத்துகின்ற ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று திங்கட்கிழமை பகல் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டிருந்த அக்கட்சியின் தலைவரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், வெறும் பெயரளவில் மட்டுமே இரா.சம்பந்தன் எதிர்க்கட்சியாக செயற்படுகிறார் என கடுமையாக விமர்சித்தார்.

"இந்த நாட்டு எதிர்க்கட்சி நாங்களே. அதனை பெப்ரவரி 10ஆம் திகதி இந்த நாட்டு மக்களே கூறிவிட்டார்கள். எதிர்க்கட்சியான சிறிசேனவையா? சம்பந்தனையா? அல்லது ஜே.வி. பியையா? மக்கள் ஏற்றுக் கொண்டார்கள்? மகிந்த ராஜபக்ஷவே உண்மையான எதிர்க்கட்சியை வழிநடத்துகின்றார் என்பதை மக்களே கூறிவிட்டார்கள். வேறு எதிர்க்கட்சி இங்கு இல்லை. ஏனைய எதிர்க்கட்சிகள் என்பது போலியானவைகளாகும்.

இன்று நாங்கள் எதிர்க்கட்சி, விரைவில் நாங்கள் ஆளுங்கட்சியாவோம். பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக இருந்துதான் ஆளுங்கட்சியாக மாறமுடியும். ஆனால் சம்பந்தனுக்கு ஆட்சியைக் கைப்பற்ற முடியுமா? அவர் பெயரளவில் எதிர்க்கட்சித் தலைவர். எதிர்க்கட்சித் தலைவர் என்பது யார்? எதிர்கால தலைவராக வரக்கூடியவராவார். ஆனால் சம்பந்தன் அல்ல, மகிந்த ராஜபக்ஷ தான் எதிர்கால தலைவர்" என்றார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துகொண்டு ஐக்கிய நாடுகளுக்கு வாக்குறுதிகளை அளிப்பதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு அதிகாரம் வழங்கியது யார் என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

"இந்த நாட்டை சர்வதேசமே ஆட்சிசெய்கிறது. இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கைகள் வெளிநாடுகளிலுள்ள தலைநகரங்களிலும், வெளிநாட்டு அமைச்சுக்களிலுமே வகுக்கப்படுகின்றன. இந்த நிலைமையை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். 2016ஆம் ஆண்டில் முத்தரப்பு ஒப்பந்தமொன்று இருந்ததாக சம்பந்தன் நேற்று முன்தினம் கூறியிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் – அரசாங்கம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அந்த முத்தரப்பிலுள்ள பிரிவினர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஐ.நாவுக்கு உறுதிமொழிகளை வழங்க அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கியது யார்? வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி அரசை வலியுறுத்தும்படி ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இரா.சம்பந்தன் கடிதம் எழுதியிருக்கின்றார்.

எனவே முழுமையான அளவில் சர்வதேசம் செயற்படுத்துகின்ற அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் மாறிவிட்டது" என்று கூறினார்.

இதேவேளை இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கண்டி கலவரம் மற்றும் நாட்டில் எழுந்துள்ள நெருக்கடிகளுக்கு மத்தியில் காணாமல் ஆக்கப்படுவதை குற்றமாக்கும் சட்டத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியதைப் போன்று, குழப்பகரமான சூழ்நிலைக்கு மத்தியில் புதிய அரசியலமைப்பையும் நிறைவேற்றும் தந்திரத்தை நல்லாட்சி மேற்கொள்ளும் சாத்தியம் இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கண்டி மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக ஜனாதிபதி விசாரணைக்குழு அமைத்திருந்தாலும், அதற்குப் பதிலாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்குமாறும் அவர் இதன்போது கோரிக்கை முன்வைத்தார். (ம)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வாயில்கள் அமைக்கும் முறைகள் எவை?**

கிழக்கு வாயில்: மிகச் சிறப்பைப் கொடுக்கும்

கிழக்கு ஆக்நேய வாயில்: திருட்டுப் போகும்

கிழக்கு ஈசானிய துவாரம்: புகழ் உண்டாகும், பிள்ளை மேன்மையடைவர்கள்

தெற்கு துவாரம்: நன்மைகள் உண்டாகும்

தெற்கு ஆக்நேய வாசல்: பெண் தொல்லை

தெற்கு ஆக்நேய துவாரம்- பெண் நன்மை

மேற்கு வாசல்- இல்லாளுக்கு மேன்மை

மேற்கு நிருதி. வாசல்: ஆண் கெடுதி

மேற்கு வாயவிய வாசல்: செல்வச் சேர்க்கை

வடக்கு வாயவிய வாசல்: நன்மை தடை

வடக்கு துவாரம்: வளர்ச்சி மேன்மை

வடக்கு ஈசானியம்: பண, பெண் மேன்மை *(தொடரும்)*

## புதிய இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் கடமைகளைப் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட சங்கர் பாலசந்திரன், நேற்று திங்கட்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வு, யாழ்ப்பாணம் மருதடி வீதியில் அமைந்துள்ள இலங்கைக்கான இந்திய துணைத்தூதரகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் துணைத்தூதுவராக கடந்த 4 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றிய ஆறுமுகம் நடராஜன் தனது சேவைக்காலத்தினை நிறைவு செய்து டில்லிக்குப் பயணமாகிய நிலையிலேயே, புதிய தூதுவராக சங்கர் பாலசந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## சிறுவர் மாதிரி சந்தை இன்று

யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் செலான் வங்கி நெல்லியடி கிளையினரும் இணைந்து நடத்தும் செலான் சிறுவர் மாதிரி சந்தை இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் முற்பகல் 11 மணி வரை யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெறும். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில ஏ9 வீதியில் (புங்கங்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர வீதி சந்தி வரை), பாரதி லேன, புங்கன்குளம்வீதி புகையிரத கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, அச்செழு, மாசிவன ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மை மீது பிடிப்புள்ளவர்களாக இருங்கள். உண்மை நிச்சயம் வெற்றி பெறும்.
- உண்மையையும், அன்பையும், தூய உள்ளத்தையும் எதுவும் எதிர்த்து நிற்க முடியாது. உண்மையானவர்களாக இருந்தால் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை.
- நீ எந்த அளவுக்கு உயர்ந்தவனாக வேண்டுமென நினைக்கிறாயோ, அந்த அளவுக்கு, கடுமையான சோதனைகளைக் கடந்து செல்ல உன்னைத் தயார் செய்து கொள்.
- வாழ்க்கையில் அனைத்து தீமைகளையும் எதிர்த்து போரிடு. வெளியில் நடப்பதை மட்டுமல்ல! உனக்குள் ஏற்படும் தீமைகளோடும் போரிட்டுக் கொண்டே இரு.
- உயர்ந்த [illegible] தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகியவற்றுடன், நேர்மையும் மனிதனுக்கு அவசியம். நேர் வழியிலேயே முன்னேற வேண்டும்.

# இனிய வாழ்வு இல்ல மாணவர்களின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்







முல்லைத்தீவு வள்ளிபுனம் மாற்றுத்திறனாளிகளுக்கான இனியவாழ்வு இல்ல மாணவர்களின் விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கட்புலன்,செவிப்புலன், பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் கொண்ட சிறுவர்களைக் கொண்ட இனிய வாழ்வு இல்லத்தில் கல்வி பயின்ற மாணவர்களில் இதுவரை பத்துப்பேர் பல்கலைக்கழக பட்டப்படிப்பினை முடித்துள்ளதுடன் 5 பேர் பட்டப்படிப்பினை தொடர்ந்து வருவதாகவும், கடந்த ஆண்டு ஒரு மாணவன் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதில் பிரதம விருந்தினராக முல்லை. வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி உமாநிதி புவனராஜா, சிறப்பு விருந்தினர்களாக புதுக் குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி சி.சுப்பிரமணி யேஸ்வரன், ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.சுப்பிரமணியம் மற்றும் பாடசாலை அதிபர்கள், வள்ளிபுனம் சிவில் பாதுகாப்பு நிலையப் பொறுப்பதிகாரி லெப்டினன் கேணல் திரக் கணேகொட, இலங்கை வங்கி புதுக்குடியிருப்பு கிளை முகாமையாளர் த.கபிலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி மதிப்பளித்துள்ளார்கள்.

மாணவர்களின் பல்வேறுபட்ட விளையாட்டுப் போட்டிகளுடன் விநோத உடை போட்டியில் பொலித்தீன் என்ற கருப் பொருளிலும் காணாமல் போனவர்களை தேடும் பெற்றோர்கள், கசிப்பிற்கு அடிமையாகும் குடும்பங்கள், டெங்கு தொற்று நுளம்பு போன்ற உடை நடை பாவனைகளுடன் விநோத உடைகளை அணிந்து அதன் விளக்கங்களை கொடுத்துள்ளார்கள். (க-281)

# சென். ஜோன்ஸ் பழைய மாணவர் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி

துடுப்பாட்ட வீரர்களின் பலத்தால், சென்.ஜோன்ஸ் பழைய மாணவர் அணியை வீழ்த்தி, யாழ்ப்பாணம் மத்தி பழைய மாணவர் அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான 112 ஆவது வடக்கின் மாபெரும் போர் பெருந்துடுப்பாட்ட போட்டிகள் கடந்த 8, 9 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெற்று முடிந்தது.

தொடர்ந்து இரு கல்லூரிகளின் பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் பழைய மாணவர் அணி, 45 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அன்புஜன் 57, அமிர்தஜன் 54, பிருந்தாபன் 25, சிறிதரன் 20, டானியல் 18 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தி பழைய மாணவர் அணி சார்பாக, ஜெரிக் துசாந்த் 4 விக்கெட்டுகளையும், ராகவன், செல்ரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், அலன்ராஜ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

256 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய யாழ்ப்பாணம் மத்திய பழைய மாணவர் அணி, 35.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் பிரியலக்சன் 73, செல்ரன் 50, டர்வின் 43, அலன்ராஜ் 29, றஜீவன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் அணி சார்பாக பந்துவீச்சில் டானியல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (க-26)

# காசநோய் விழிப்புணர்வு கிரிக்கெட் அரையிறுதிக்கு தெரிவானது ஸ்ரீகாமாட்சி

யாழ்ப்பாணம் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தினரால் உலக காசநோய் தினம் -2018 ஐ முன்னிட்டு காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உள்ளூர் கழகங்கள் திணைக்களக் கழகங்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட 9 பேர் பங்கு பற்றும் 6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் தெரிவுப் போட்டி நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் குழு B இல் இடம்பெற்ற 13 அணிகள் போட்டியிட்டன. நேற்று நடைபெற்ற காலிறுதிப்போட்டி 2 இல் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வண்ணார் பண்ணை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 70 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 44 ஓட்டங்களைமட்டுமே பெற்றது. இதனடிப்படையில் வண்ணார் பண்ணை ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி அரையிறுதிச் சுற்றிற்கு முன்னேறியுள்ளது. (க)

# புறாக்களுக்கான பந்தயம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்





உலகின் மிகப் பழைமையான விளையாட்டுக்களில் ஒன்றான புறாக்கள் இடையிலான பந்தயம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகியுள்ளது.

டபுகயா (பந்தயப் புறாக்கள் கழகம் - யாழ்ப்பாணம் :ரேஸிங் பீஜின்ஸ் கிளப் ஜெவ்னா) இந்த வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. முதல் முறையாக 125 கிலோ மீற்றர் தூரத்துக்கான பந்தயம் மார்ச் முதல் வாரத்தில் இடம் பெற்றது.

அதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். நகரில் உள்ள ரிக்கோ சிற்றி சொகுசு விடுதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தின் பிரபல மருத்துவ நிபுணரும் நீண்டகாலமாகப் புறா ஆர்வலராக இருந்து வருபவருமான மருத்துவர் கே.சுரேஸ்குமார் தலைமை அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றி பெற்ற புறாக்களின் உரிமையாளர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தார்.

குருநகரைச் சேர்ந்த எம்.அஜித்குமாரின் இரு புறாக்கள் ஒரு மணி 40 நிமிடங்களில் பந்தயத் தூரத்தைக் கடந்து முதல் பரிசைத் தட்டிச் சென்றன.

சங்கானையைச் சேர்ந்தவரான ரி.நிதர்சனின் புறா மூன்றாம் இடத்தையும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.காந்தரூபனின் புறா நான்காவது இடத்தையும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.பிரியதர்ஸனின் புறா ஐந்தாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன.

புறாப் பந்தயங்கள் உலகின் பல நாடுகளிலும் பல நூறு ஆண்டுகளாக நடக்கின்றன.

அங்கெல்லாம் பல மில்லியன் டொலர் பரிசுகளை அள்ளிக்கொட்டும் ஒரு விளையாட்டாக இது இருந்தாலும் அண்மையில்தான் இலங்கையில் பந்தயங்கள் நடக்க ஆரம்பித்துள்ளன.

கண்டியில் உள்ள புறா ஆர்வலர்கள் சேர்ந்து முதன் முதலில் புறாப் பந்தயத்தை இங்கு நடத்தினார்கள்.

அதனைத் தொடர்ந்து பல பகுதிகளிலும் இந்தப் பந்தயம் தற்போது நடைபெற்று வருகின்றது.

வடக்கில் முதன் முதலில் நடத்தப்பட்ட பந்தயம் இது தான் என்று தெரிவித்தார் கழகத்தைச் சேர்ந்த ரி.பி.அன்ரன். (க-4)

# தெல்லிப்பழை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ந.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரன் யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க. விஜிதரனும் மகாஜனாக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரனும் சிறப்பு விருந்தினராக தேசிய சாதனையாளர் செல்வி அனித்தாவும் கலந்து சிறப்பித்தனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கரப்பந்து, கபடி, துடுப்பாட்டம், உதைபந்து, எல்லே, வலைப்பந்து மற்றும் கயிறு இழுத்தல் உட்பட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் அரச அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (க)

## சாவகச்சேரிப் பகுதியில்...

கீழ் இருந்து விடுதலைப் புலிகளின் சீருடைக ளுடன் சீ4 (C4) வெடி மருந்தும் நேற்று மீட்க ப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பகுதியில் குடிநீர் குழாய் பொருத்துவதற்கான பணிகள் இடம்பெற்று வருகிறது. அதில் நேற்று மாலை குழாய் நீர் பொருத்துவதற்கான அகழ்வு இடம்பெற்றது. அப்போது நிலத்தில் இருந்து விடுதலைப் புலிகள் பயன்படுத்திய புலிச் சீருடை ஒன்றும் சீ4 (C4) வெடிமருந்துகளும் மீட்கப்பட்டுள் ளன.

இச்சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து பொலிஸார் அவற்றினை மீட்டுச் சென்றுள்ளனர். (ம-9)

## ஜெனிவாவுக்கு...

அங்கு எடுத்துரைப்பார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி ஊருத்திரபுரம் சிவ நகர் பகுதியில் மூத்தோர் சங்க கட்டடத்தினை வடமாகாண முதலமைச்சர் திறந்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை குறிப்பி ட்டார்.

அத்தோடு ஜெனிவாவுக்கு அனந்தி சசி தரன், சிவாஜிலிங்கம் ஆகியோர் சென்றிரு க்கின்றார்கள் என்றும் வேறு யார் யார் செல் கின்றார்கள் என்பது தனக்கு தெரியவில்லை என்றும் குறிப்பிட்ட முதலமைச்சர் அனை த்து விடயங்களையும் தங்களுடைய பிரதி நிதிகள் எடுத்துரைப்பார்கள் என்றும் குறிப்பி ட்டார்

சிவநகர் மூத்தோர் சங்க தலைவர் ரகு பதி தலைமையில் இடம்பெற்ற மூத்த பிரஜை கள் சங்கத்தின் கட்டடத் திறப்பு விழாவில் பிர தம விருந்தினராக வடமாகாண முதலமைச் சர் கலந்து கொண்டதுடன், வைத்தியர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம த்தின் மூத்தோர் சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ம-312)

## கண்டிக் கலவரத்து...

சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற கலவரங்களுக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு என்று போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்திவரும் தரப்பின ருக்கு விசாரணை அறிக்கை சிறந்த பதிலாக அமையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டி திகன, தெல்தெனிய உள்ளிட்ட மாவ ட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த வாரம் இடம்பெற்ற கலவரத்தை அடுத்து நிலைமை வழமைக்குத் திரும்பியிருக்கும் நிலையில் தற்போதைய நிலை தொடர்பாக தெளிவுபடுத் தும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று திங்கட்கிழமை பகல் நடைபெற்றது.

சட்டம், ஒழுங்கு அமைச்சராக புதிதாக நியமனம் பெற்ற அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கல ந்துகொண்டிருந்தார்.

கண்டி கலவரத்திற்கான முழுப் பொறுப் பும் நல்லாட்சி அரசாங்கமே ஏற்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிரணியினர் தெரிவித்து வருகின்ற நிலையில், இந்த ஊட கவியலாளர் சந்திப்பில் இந்தக் குற்றச்சாட்டு க்களுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அர சாங்கத்தின் மீது மட்டுமே குற்றச்சாட்டுக் களை அடுக்கிவருகின்றனர். இந்நிலையில் யார் இதற்குப் பின்னால் இருந்தவர்கள்? யார் இதற்கு உத்தரவிட்டவர்கள்? வர்த்தக நிலை யங்களையும், வீடுகளையும் கொளுத்தியவ ர்கள் யார்? என்பது பற்றி விசாரணை நட த்திவருகின்றோம். சம்பந்தப்பட்ட அறிக்கை வந்தவுடன் இதனை யார் செய்தார்கள் என் பதை அம்பலப்படுத்துவோம் என்றார்.

இதேவேளை சட்டம், ஒழுங்கு அமைச்ச ராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக் கப்படுவார் என்று தென்னிலங்கை வட்டார ங்களில் தெரிவித்துவந்த போதிலும், அந்த அமைச்சை ரஞ்ஜித் மத்தும பண்டாரவுக்கு வழங்கியதை அடுத்து ஜனாதிபதியின் இந்த முடிவை பீல்ட் மார்ஷல் பொன்சேகா கடுமை யாக விமர்சித்திருந்தார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் இந் தக் கருத்து தொடர்பாக அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார நேற்றைய ஊடகவியலா ளர் சந்திப்பின்போது பதிலளித்தார்.

இயலாதவர்களுக்கு பொறுப்பு கொடுக்க ப்பட்டதாக அவர் எந்த இடத்திலும் கூறியிரு க்கவில்லை. அவர் எனது சிறந்த நண்பன். எனவே எவ்வித பிரச்சினையும் இல்லை. இந்த முடிவினை ஜனாதிபதியும், பிரதமருமே எடு த்தனர். நான் இதனைக் கேட்கவுமில்லை. என் மீதான நம்பிக்கையின்படி இதனை எனக்கு அளித்துள்ளனர். சரத் பொன்சேகா நேற்று காலையில் கூட என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். எந்த பிரச்சினையும் இல்லை.

அவருக்கு ஆவேசம் எழுந்திருக்கலாம். அதனால் அறிவிப்பை வெளியிட்டிருக்கலாம். அதைக்குறித்து பெரிதாக சிந்திக்கத் தேவை யில்லை. எனினும் வேலை முடியாதவர்கள் யார் என்பது போகப்போகத் தெரியும். சரத் பொன்சேகா போர்க் காலத்தில் சிறந்த திற மைகளை வெளிப்படுத்தியவர். அதுகுறித்து அவருக்கு கௌரவத்தை வழங்க வேண் டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு தொடர்ந்தும் உரை யாற்றிய அமைச்சர் மத்தும பண்டார, இலங் கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள சமூக வலைத் தளங்கள் மீதான தடை மற்றும் அவசர காலச் சட்டம் என்பன மிகவிரைவில் நீக்கப்ப டும் என்றும் உறுதியளித்தார். (ம)

## அரசாங்கத்தை...

தில்லையென அத்துரலியே ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

பதுளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், மீண்டும் விஷ இரசாயனங்களை கொண்டு வருதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகின் றது. சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் உரம் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை மீண்டும் கொண்டுவருவதற்கான தீர்மானத்தை கைவிடாவிடின் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பின்நிற்க போவதில்லை என கூறினார். (ம)

## இனந்தெரியாதோர்...

சிலர் வீட்டின் மீது இரண்டு பெற்றோல் குண்டுகளை வீசிவிட்டு சென்றுள்ளனர். ஆனால் வீட்டில் இருந்தவர்களால் உடனடி யாக குறித்த தீ அணைக்கப்பட்டதால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரி வித்தனர். மேற்குறித்த சம்பவம் குறித்து மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த இரண்டு மாதங்க ளுக்கு முன்னர் குறித்த வீட்டில் நின்றிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் பெற்றோல் ஊற்றி தீவைக்கப்பட்டிருந்தது என பொலிஸார் தெரி வித்திருந்தனர். (ம-9)

## சமூகவலைத்தளங்கள்...

வார்த்தைகள் நடைபெற்றிருந்தன.

எனினும் இறுதியான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலைமை பெரும்பாலும் இன்றைய தினம் சீரடையும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அதேநேரம், பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் தற்காலிகமாக தடைசெய் யப்பட்டுள்ளமை தொடர்பில், பேஸ்புக் நிறுவ னம் பதில் வழங்கி இருக்கிறது.

இந்த விடயம் குறித்து இலங்கை அர சாங்கத்துடனும், அரச சார்பற்ற அமைப்புக ளுடனும் தொடர்பில் இருப்பதாக அந்த நிறு வனம் குறிப்பிட்டுள்ளது.

குரோத பதிவுகள் மற்றும் இனமுறுகலை ஏற்படுத்தும் பதிவுகள் தொடர்பில் தாங்கள் இறுக்கமான கொள்கையை பின்பற்றுவதா கவும், அவ்வாறான பதிவுகளை கண்டறிந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் என்றும் பேஸ்புக் நிறுவனம் அறிவி த்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற வன்முறை சம்ப வங்கள் வேறு இடங்களுக்கும் பரவாது தடு க்கும் நோக்கில் சமூக வலைத்தளங்கள் மீதான தற்காலிக தடை ஏற்படுத்தப்பட்டது.

இதனை அடுத்து வன்முறை சம்பவங் கள் குறைவடைந்திருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சமூக ஊடகங்களுக்கான தடை நிலவுகின்ற நிலையில், சிலர் சட்ட விரோதமான முறையில் மாற்றுவழிமுறை களைப் பயன்படுத்தி பேஸ்புக் உள்ளிட்ட கணக்குகளுக்கு பிரவேசித்துள்ளனர்.

அவ்வாறானவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவும், இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு வும் விசாரணைகளை நடத்தி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுவழியில் பேஸ்புக்கில் பிரவேசித்து இனக்குரோத பதிவுகளை இட்டுவந்த கொழு ம்பு பிரதேச பாடசாலை ஒன்றின் மாணவர் கைது செய்யப்பட்டு, எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ள்ளார்.

இந்தகுற்றச்சாட்டில் ஏலவே இரண்டு மாணவர்கள் கைதாகி விளக்கமறியலில் இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழ் இன அழிப்பிற்கு...

பமாகியுள்ளது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த போரா ட்டமானது தற்போது ஜெனிவா முருகதாசன் திடலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

பல தசாப்தங்களாக இலங்கையில் தொட ர்ந்து நடத்தப்படும் தமிழினப் படுகொலையை முழுமையாக ஆராய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அவை மார்ச் 2011 அறி க்கைக்கு நீதி கிடைக்கும் பொருட்டு அனை த்துலக சமூகம், அனைத்துலக நீதிமன்றில் விசாரணையை நடத்தி தமிழ் மக்களுக் கான நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஐந்து அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி இப்போராட்டம் முன்னெடு க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை அரசுக்கு...

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 37ஆவது கூட்டத்தொடரில் எதிர் வரும் 21ஆம் திகதி இலங்கை தொடர்பி லான அறிக்கையை ஐ.நா மனித உரிமை கள் ஆணையாளர் இளவரசர் செயித் அல் ராட் ஹுசைன் சமர்ப்பிக்கவுள்ளார்.

அறிக்கையில் உள்ள விடயங்களுக்கு பதில் அளிக்க அரசாங்கம் தயாராக உள்ள தாக ஜெனிவாவுக்கான இலங்கையின் நிர ந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.

பொறுப்புக் கூறல் செயற்பாட்டை முன் னெடுப்பதில் இலங்கை தாமதம் காட்டுவ தாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் செய்ட் ராட் அல் ஹுசைன் தெரிவித்திருந்தார்.

ஐ.நா மனித உரிமை பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித் திருந்த அறிக்கையிலே இந்த விடயம் சுட் டிக்காட்டப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 26ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் மார்ச் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பொறுப்புக் கூறல் தொடர்பில் 30/1 பிரே ரணையை நிறைவேற்றுவதற்கு இலங்கை க்கு இரண்டு வருட கால அவசாகம் வழங்கி ஒரு வருடம் பூர்த்தியாகும் நிலையிலே ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது.

இதேவேளை ஐ.நாவின் அரசியல் விவ காரங்களுக்கான பிரதி செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மெனை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் சந்தி த்திருந்தார்.

மேலும், இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் ஜெனிவாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவிடம் கேட்டபோது.

21ஆம் திகதி நடைபெறவுள்ள அமர்வி ற்கு வெளிவிவகார அமைச்சர் இலங்கை குழு விற்கு தலைமைத்துவம் வழங்குவார். இம் முறை எவ்வித பிரேரணைகளும் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படுவதில்லை. எனவே ஒவ்வொரு நாடுகளும் தங்களது நிலைப்பாடுகளை வெளியிடும். எமது கல ந்துரையாடல்களின் படி சிரமமான விடயங் களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை எடுக்கும் முயற்சி தொடர்பில் பெரும்பாலான நாடுகள் பாராட்டியுள்ளன. அத்துடன் எமது செயற்பாட்டின் வேகம் தொடர்பில் சில நாடு கள் விமர்சனங்களையும் தெரிவித்தார். (ம)

## நாட்டின் பொருளாதாரம்...

கையர்களின் பாரிய எதிர்ப்பை அரசாங் கம் சந்திப்பதோடு நாட்டின் பொருளாதாரம் தொடர்ச்சியாக பின்னடைவினை எதிர்கொள்ள வேண்டுமென அயல் நாட்டை வாழ்விடமாக கொண்ட இலங்கையர்களின் உரிமைகள் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சுபாசன அபயவிக்கிரம தெரிவித்துள்ளார்.

மாலபேயில் அமையப்பெற்றுள்ள அயல் நாட்டை வாழ்விடமாக கொண்ட இலங்கை யர் உரிமைகள் அமைப்பின் தலைமைய கத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம)

## கோத்தபாயவே...

2020ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்த லில் பாரிய மாற்றங்கள் உருவாகுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலை வர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட கூட்டு எதிர்க்கட்சியின் பொது வேட்பா ளராக கோத்தபாயவை கூட்டு எதிரணியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிக்கி ன்றமை தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம)

## பயங்கரவாத...

மளிக்க முடியாது எனவும், இதற்காக எதிர் காலத்தில் சட்டத்தை உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரி வித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் நடந்த நிலை மைகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஒரு நபரோ அல்லது சிலரோ இனவாத இலக்கின் ஊடாக செயற்பட்டால், அதனை கட் டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் என்ற வகையில் எடுக்க வேண் டும்.

அவ்வாறில்லாமல் ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மூலம் பயங்கரவாத த்தை உருவாக்க இடமளிக்க முடியாது என வும் வஜிர அபேவர்தன மேலும் தெரிவித்து ள்ளார். (ம)

## கண்டி வன்முறைக்கு...

சட்டத்திற்கு அமைய தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பலாங்கொடை பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரை யாற்றும் போதே அவர் இதனை கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி வன்முறை பேஷ்புக் குழுவொன்று இணைந்து ஏற்படுத்திய அழிவு. இப்படி கூறி னால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள். எனினும் அதுதான் உண்மை. கடந்த சில நாட்களுக்கு முன்னர் கண்டி தீப்பற்றி எரிந் தது.

சிலரது தேவை மற்றும் இருப்புக்காக இந்த பேஷ்புக் குழு நாடு முழுவதும் பரவியு ள்ளது. நாங்கள் எந்த அர்ப்பணிப்பையாவது செய்து நாட்டில் மீண்டும் அப்படியான நிலைமை ஏற்பட இடமளிக்க மாட்டோம்.

இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தி ற்கு மக்கள் தலைமையேற்க வேண்டும். பலாங்கொடை நகரில் இருக்கும் கடை, அவ ருடையது, இவருடையது என்றில்லை.

அனைத்து கடைகளும் ஒன்றே. அம் பாறையிலும் அண்மையில் சம்பவம் ஒன்று நடந்தது. கருத்தடை மாத்திரை குறித்து சமூ கத்தில் பேசப்பட்டது.

மாத்திரை எனக் கூறப்பட்டதை இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பிய போது அது மாத்தி ரையல்ல மா உருண்டை என கண்டறியப்ப ட்டது எனவும் அமைச்சர் தலதா அத்து கோரள குறிப்பிட்டுள்ளார். (ம)

சுப்பர் மார்க்கட் பணியாளர் விற்பனை பிரதிநிதிகளுக்கு
டுபாய் வேலைவாய்ப்பு
துப்பரவுப் பணியாளர் (Cleaners) ஆ/பெ
தொழிலாளர்கள் (Labourers)
வெற்றிடங்களும் உண்டு
(C-1866)
குறிப்பு | கம்பனி பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பணி ஒப்பந்தம் பெற்ற பின்னரே பயணக் கட்டணம் அறவிடப்படும்
விபரங்களுக்கு 0777 324 004
இலங்கையின் முதல்தர வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்
TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114 426 222
வடக்கு மாகாண ஏக முகவர்
SIKARAM ACADEMY Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
221 – 1/1. மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 - 222 00 11

# அடுத்த சில நாட்களில்...

துடன் காணப்படும் என்றும் தொடர்ந்து மழை பெய்வதற்கு சாத்தியங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுவதுடன் காற்றின் வேகமானது சடுதியாக அதிகரித்து வீசக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே மீனவர்கள் அடுத்த 48 மணித்தியாலங்களுக்கு கடற்பகுதிகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும் கடலில் பயணம் செய்வோரும் இவ்விடயத்தில் அவதானமாக இருக்குமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்ட ஒரு அலை போன்ற தளம்பல் நிலை ஒரு தாழமுக்கப் பரப்பாக தீவிரமடைந்துள்ளதுடன் மேலும் வலுவடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இலங்கையின் தென் பகுதியில் மையம் கொண்டிருப்பதுடன் மேற்கு - வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதன் தாக்கம் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் மேகக் கூட்டங்களுடன் வானமும் மழையுடன் கூடிய வானிலையும் தொடருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுவதுடன் அவ்வேளைகளில் காற்றின் வேகமானது சடுதியாக மணித்தியாலத்துக்கு 70 - 80 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

காலியிலிருந்து அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பகுதிகளில் மழை பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது.

ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

கடற் பிரதேசங்களில் காற்று மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்றும் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

வேலைவாய்ப்பு
கிளிநொச்சியில் இயங்கிவரும் எமது அரச அங்கிகாரம் பெற்ற எவறெஸ்ட் (Everest) நிறுவனம் ஆனது புதிய கிளைகளுக்கான பதவி வெற்றிடங்கள் பின்வருமாறு கோருகின்றது.
1. விற்பனைப் பிரதிநிதிகள்
2. மேற்பார்வையாளர்கள்
3. உதவி முகாமையாளர்கள்
4. முகாமையாளர்கள்
5. அலுவலக உதவியாளர்கள்
(C-1865)
O/L, A/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 0779856671, 0771717278

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
(3204)
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

# சிறுமியைக் கடத்திச் சென்று...

மன்றம் உத்தரவிட்டது.

வடமராட்சி, வல்வெட்டித்துறையில் 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 வயதுச் சிறுமி ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்குட்படுத்தப் பட்டார்.

சிறுமி வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் 22 வயதுடைய (குற்றம் இடம்பெற்ற போது) இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. அதன் நிறைவில் சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வழக்குக் கோவைகள் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

முதலாவது சந்தேகநபர் மீது கடத்தல் மற்றும் வன்புணர்வுக் குற்றச்சாட்டும் இரண்டாவது சந்தேகநபர் மீது கடத்தல் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு சட்ட மா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர்கள் இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொள்கின்றனர். தமது குற்றத்துக்காக அவர்கள் தற்போது மனம் வருந்துகின்றனர்.

அவர்கள் இருவரினதும் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு குறைந்தபட்சதண்டனையை வழங்குமாறு மன்றிடம் கோருகின்றேன் என்று எதிரிகளின் சட்டத்தரணி மன்றில் கருணை விண்ணப்பம் செய்தார்.

எதிரிகள் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையால் அவர்களுக்கு அதிகபட்சதண்டனை வழங்கவேண்டும். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடு பெற்றுக்கொடுக்க மன்று உத்தரவிடவேண்டும் என்று அரச சட்டவாதி சுகாந்தி கந்தசாமிமன்றில் விண்ணப்பம் செய்தார்.


குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். முதலாவது எதிரி சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்ந்துள்ளார். இரண்டு குற்றங்களுக்காகவும் முதலாவது எதிரிக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.

முதலாவது எதிரி, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும். தண்டமாக 5 ஆயிரம் ரூபாய் செலுத்தவேண்டும். அதனை செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இரண்டாவது எதிரி, சிறுமியைக் கடத்திச் செல்ல முதலாவது எதிரிக்கு துணை நின்றுள்ளார். அதற்கு அவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அந்தத் தண்டனை 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

அத்துடன், 5 ஆயிரம் ரூபாய் தண்டம் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ம-9)

வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் செல்லையா குமாரசாமி
தோற்றம் : 1944.06.20 மறைவு :- 2018.02.12
கடந்த 12.02.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா குமாரசாமி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு 13.03.2018 (இன்று) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.
அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(C-1867)
இல.16, மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
- குடும்பத்தினர்

# மன்னிப்புக் கோரியதில்...

பொம்மைவெளி பகுதியில் அமைந்துள்ள வழிபாட்டு தலம் ஒன்றுக்கு முன்னால் நிற்கும் இளைஞர்களுக்கும், வழிபாட்டு தலத்தில் உள்ளவர்களுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து இளைஞர்கள் சிலர் அங்கு திரண்டமையால் பதற்றம் ஏற்பட்டது. எனினும் தமக்குள்ளே இளைஞர்கள் மற்றும் வழிபாட்டு தலத்தினர் பேசி பிரச்சினையை சுமுகமாக தீர்த்து கொண்டனர்.

பின்னர் இரு தரப்பினரும் பரஸ்பரம் மன்னிப்பு கோரி, ஒற்றுமையாக சென்றனர். இந்த முரண்பாட்டால் பொலிஸ் மற்றும் இராணுவம் அந்த பகுதியில் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. (ம-4,9,17,246)

# சிறுமி துஷ்பிரயோக வழக்கு...

வரி முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் 16 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவர் 3 தடவைகள் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிறுமி வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான சுருக்கமுறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது. விசாரணைகளின் நிறைவில் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கேடுகள் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டன.

சந்தேகநருக்கு எதிராக 3 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சட்ட மா அதிபரால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

எதிரி குற்றத்தை ஏற்றுக்கொள்கிறார். அந்தக் குற்றத்துக்காக அவர் வருந்துகிறார். அவரது குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு எதிரியின் சட்டத்தரணி மன்றில் கருணை மனு விண்ணப்பம் செய்தார்.

எதிரி தாமாக முன்வந்து குற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடும் பெற்றுக்கொடுக்க மன்று உத்தரவிடவேண்டும் என்று அரச சட்டவாதி சுகந்தி கந்தசாமி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரி குற்றச்சாட்டுக்களை தாமாக முன்வந்து ஏற்றுக்கொண்டுள்ளார். 3 குற்றங்களுக்கும் எதிரிக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபாய் இழப்பீட்டை வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் ஒரு ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். 15 ஆயிரம் ரூபாய் தண்டமாகச் செலுத்தவேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 3 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ம-9)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550/= Kg
கனடா – 1050/= Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-1828)
தொடர்புகளுக்கு: 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

பதவி வெற்றிடம்
புதியதோர் எதிர்காலத்தை நோக்கி ..........
யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தினருக்கான பயிற்சியுடன் கூடிய பதவி வெற்றிடங்கள்: 16 பேர் மட்டும். ஆரம்பம் - 17, 500 /= - பின் 55000 /=
இன்றே அழைக்க :- 077 556 6224
தங்குமிடம், உணவு வசதிகள் உண்டு (3189)

அறிமுகம் - Rs. 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் (C-1813)
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.